DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
i HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1546
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday November 21, 2025

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail: raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam, Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

# தமிழ் இனத்தின் விடிவுக்காய் தமதுயிரை அளி(ழி)த்தவர்கள்




“மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திரச் சிற்பிகள் எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீர மறவர்கள் எமது இனத்தின் சுதந்திரத்திற்காக,கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈர்ந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்” ---கே.பாலா

---

தமிழினத்தின் இறையாண்மை வேர்களாக தமிழீழ மண்ணைப் பற்றியிருக்கும் மாவீரர்களைப் போற்றும் மாவீரர் நாள் பற்றி கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய உயிர்ப்பான வரிகள்“

“மாவீரச் செல்வங்கள் மண்கிழித்து வெளிவந்து சாவீரச் செய்தி சாற்றி உறவுரைத்து பேசும் நாள். என்பதாகும் இவர்கள்தான் தமிழினம் போற்றி வணங்கும் ,சிங்களத்தேசம் அஞ்சி நடுங்கும் ,சர்வதேசம் விழியுர்த்திப் பார்க்கும் எங்கள் மாவீரர்கள். மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் உயிர்க்கொடை தந்த இந்த புனிதர்களுக்கு மக்களாக ஒன்றுகூடி வணக்கம் செலுத்துவோம்!

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# சோழப்பெருவேந்தர் இராஜேந்திரசோழரின் கடாரவெற்றியின் ஆயிரமாவது ஆண்டு கொண்டாட்டம் இன்று 21ம் திகதி கம்போடியாவில் ஆரம்பமாகின்றது



## அதில் கலந்து கொள்ளும் கனடா உலகத் தமிழ் பண்பாட்டுஇயக்கத்தின் பிரதிநிதிகளை விமானநிலையத்தில் வரவேற்ற கம்போடிய குடிவரவு அதிகாரி

பலநாடுகளுக்கு பண்டைய கப்பல்களில் கடல்கடந்து பயணித்து அவற்றை தனது போர்த்திறனால் வெற்றி கொண்டு தமிழ்க் கல்வெட்டுகளையும் ஆலயங்களையும் உருவாக்கிய சோழப்பெருவேந்தர் இராஜேந்திரசோழரின் கடாரவெற்றியின் ஆயிரமாவது ஆண்டு கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள கம்போடியா சென்றுள்ள கனடா உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பிரதிநிதிகளை தமிழ்ச் சங்கத்தின் முக்கிய தலைவர்களும் கம்போடிய குடிவரவுத் திணைக்களத்தின் அதிகாரியும் வரவேற்றனர்.

(தொடர்ச்சி ம் பக்கம்)

சிறு கற்கள் கொண்டு பெரும் சரித்திரம் படைப்போம்.

சிறு துளி பெரு வெள்ளம்
நாம் ஒன்றாய் சேர்ந்து கட்டி முடிப்போம்..
தமிழ் சமூக மையம் Tamil Community Centre

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

# தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்

**THE INTERNATIONAL CENTRE | இன்ரர்நஷனல் சென்ரர்**

**6900 Airport Road, Mississauga, Ontario L4V 1E8 - GATE-5**




**ரொறன்ரோ**
27-11-2025
வியாழக்கிழமை
THE INTERNATIONAL CENTRE
(மண்டபம்-5 / Gate -5 )
6900 Airport Road
Mississauga ON L4V 1E8

**கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்**
வழமைபோன்று ஒரே இடத்தில்
மூன்று நிகழ்வுகள் இடம்பெறும்!
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி

**மொன்றியல்**
27-11-2025
வியாழக்கிழமை
மாலை 5:00 மணி
Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2

**ஒட்டாவா**
27-11-2025
வியாழக்கிழமை
மாலை 5:30 மணி
Nepean Sportsplex - Hall A
1701 Woodroffe Ave,
Nepean, ON K2G 1W2

Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com
www.tamilremembrance.com / www.facebook.cm/tamilremembrance

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 | Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள்
Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# வியந்துநிற்கும் வரலாற்றையும் கலங்கி நிற்கும் இதயங்களையும் எமக்காய் விட்டுச் சென்ற மாவீரத் தெய்வங்கள்!

உலகம் வியந்து நிற்கும் வீர வரலாற்றையும் உலகத் தமிழ் மக்கள் கலங்கி நிற்கும் இதயங்களோடு வருடா வருடம் வணங்கும் வகையான பண்பாட்டு நெறியையும் படைத்து விட்டுபோன எமது மாவீரத் தெய்வங்களுக்காய் மரியாதை செய்யும் அந்த மாதத்தில் நாம் புகுந்துள்ளோம். ஒவ்வொரு வருடத்தின் காரத்திகை மாதமும் உலகத்தமிழர்கள் அனைவருக்கும் ஒரு மரியாதைக்குரிய மாதமாக மாறிவிட்டது. எநத வருடத்தில் எமது தேசியத் தலைவர் தமது மாவீரர் நாள் உரையை ஆற்றத் தொடங்கினாரோ அன்றிலிருந்து நம் மக்களும் உணர்வாளர்களும் உறக்கத்தை மறந்து உருக்கத்தோ எழுந்து தமக்காய் உயிர்த்தியாகம் செய்த வீர மறவர்களுக்காக கண்ணீர் சொரிந்து கைகளில் வெளிச்சம் ஏந்தி நிற்கும் பண்பாட்டு கோலத்தை வரைந்தவர்களாகிவிட்டோம் என்றால் அது மிகையாகாது.

தமிழர் வரலாற்றில் மாத்திரமல்ல உலகின் எந்த மூலையிலும் இன ரீதியா-கவோ அன்றி மொழி ரீதியாகவோ அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வாழும் தேசிய இனங்களின் கண்களைத் திறக்கச் செய்த தெய்வீக ஒளிவீசும் மாதந்தான் கார்த்திகை என்னும் வணக்கத்திற்குரிய மாதமாக உலக நாட்காட்டியில் அழுத்தமாகப் பதியப்பெற்ற ஒன்றாக மாறியிருக்கின்றது என்பதையும் நாம் உணரவேண்டும்.

உலக விடுதலை நோக்கிய பயணத்தை மேற்கொள்வதற்காக தனித்தமிழர் மரபு வழி இராணுவத்தை தரை, கடல் என கடந்து வான் படையை நிறுவி பற்றுறுதியோடு தமிழர் நாமென்ற தலை நிமிர்வுடன் தமிழ்த் தேசியம், தமிழர் தாயகம், தமிழீழ மக்களின் அடையாளமாகவும், தமிழர்களைத் தனிப் பெரும் சக்தியாக உலகிற்கு அடையாளப்படுத்திய அமைப்பாகவும் விளங்கிய தமிழீழ விடுதலைப்புலிகள் தாங்கள் கொண்ட கொள்கையில் இறுக்கமான பற்றுறுதி கொண்டவர்களாய் தமிழீழ தேசத்தையும் அதன் விடுதலையையும் அதிகம் நேசித்தவர்கள்.

"சத்திய யுத்தம் நடக்கிறது! சாவிலும் நிம்மதி தெரிகின்றது!
எத்தனை யுகங்கள் கடந்தாலும் ஈழத்தைஅடைவது நிச்சயமே!
என்றும்
"முப்படை கொண்ட முழு நாடாம் முடிந்தால் எதிரி நுழையட்டும்"
என்ற வீரக் காவியத்தை எழுதிவைத்து விட்டுப் போன மாவீரர்களின் வீரத்தையும் சுதந்திர வேட்கையையும் எழுத்தில் வடிக்க எத்தனையோ இலக்கியவாதிகள் கைகளில் எழுது கருவி எடுத்து வேட்கையோடு காத்திருக்கின்றார்கள்.

தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு செயல் உருவம் கொடுத்தவர்கள், தமிழ்த் தேசிய இனத்தின் இறையாண்மையை பிரயோகிக்கவும் களமாடி, தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திர வேள்விக்கு தம் உயிர்களை வித்தாகி விருட்சமாய் மிளிர்பவர்கள் மாவீரர்கள்.
""எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால்எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புகள் அர்த்தமற்ற இழப்புகள் அல்ல, இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக, எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமதுபோராளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்குசக்தியாகஅமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள்.சுதந்திரச்சிற்பிகள் எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீர மறவர்கள் எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈர்ந்துள்ள இந்தமகத்தான தற்கொடையாளர்கள் (தியாகிகள்) காலம் காலமாக எமதுஇதயக் கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒருசாதாரண மனிதப் பிறவி அல்ல அவன் ஓர் இலட்சியவாதி ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன் தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக, விமோசனத்திற்காக வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்கை உன்னதமானது. அர்த்தமுள்ள சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே, விடுதலை வீரர்கள் அபூர்வமானமனிதப்பிறவிகள், அசாதாரணமான பிறவிகள்" என்றார் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்..

உலகத்தைத் திரும்பிப் பார்க்க வைத்த விடுதலைப்புலிகளினால் 2008 ஆம் ஆண்டு இறுதியாக அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் நாளில் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆற்றிய உரையில் ""எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் நாம் தமிழரின் சுதந்திர விடிவுக்காக தொடர்ந்து போராடுவோம். வரலாறு விட்ட வழியில் காலம் இட்ட கட்டளைப்படி சிங்கள அந்நிய ஆக்கிரமிப்பு அகலும்வரை தொடர்ந்து போராடுவோம். தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வாழ்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களை பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன்" என்றார்.

எனவே ""எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் நாம் தமிழரின் சுதந்திர விடிவுக்காக தொடர்ந்து போராடுவோம்""என்ற உறுதியுரையை தன்மானத் தமிழர்களாக எடுப்போம். தமிழர்களாய் ஒன்றிணைவோம் ,தலைவர் வழி நடப்போம் .தமிழ் தேசம் பாதுகாப்போம். என்ற வாசகங்களை நாம் மனதில் நிறுத்தி மனச்சாட்சியோடு மாவீரர்களை வணங்குவோம் என உறுதியெடுப்போம்!

மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள்
காலம்: 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9:30 - மதியம் 2:00 வரை
METROPOLITAN CENTRE
3840 FINCH AVE. EAST M1T 3T4



ஒரு துளி கண்ணீர்
ஒரு காந்தள் மலர்
ஒரு சுடர்
தொடர்புகளுக்கு: கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் 647-619-3619
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

கனடாவின் பனிக் காலத்தை யாழ்ப்பாணத்தில் நிம்மதியாக கழித்திட......




கனடாவின் பனிக் காலத்தை யாழ்ப்பாணத்தில் நிம்மதியாக கழித்திட விரும்புகின்றீர்களா? யாழ்ப்பாணம் மானிப்பா நகரத்திற்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய அழகிய வீட்டை மாதாந்த அடிப்படையில் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக விபரங்களுக்கு:
Visnu 0094 77515 6292 / 0094 77515 5331
Whats App 44 7957 561 555

Room for rent in Scarborough
Room for rent in Scarborough .
1 B/R. 1 Bath. Central heating furnished.
Contact 647 648 8822

மிசிசாகா இலங்கை உணவகத்திற்கு சமையல்காரர் தேவை
மிசிசாகா நகரில் இயங்கிவரும் புகழ்பெற்ற உணவகத்திற்கு உடனடியாக அனுபவம் உள்ள சமையல்காரர் தேவை. இலங்கை இந்திய உணவுகள் மற்றும் கறிகள் தயாரிக்கும் அனுபவம் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- ராஜன் 416 457 8609

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகருக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளருக்கும் இடையிலான சந்திப்பு



இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் என்ரு பெட்ரிக் (Andrew Patrick) மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை 14ம் திகதியன்று முற்பகல் பத்தரமுல்ல பெலவத்தை மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் நிகழ்கால அரசியல் நிலைமைகள் பற்றியும் பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவுகின்ற நீண்டகால நட்புறவு பற்றியும் இதன்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன. குறிப்பாக, பிரித்தானியா எதிர்காலத்தில் இலங்கைக்கு ஒத்துழைப்பை வழங்குமென்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா இம்மாதம் 21 ஆம் திகதி பிரித்தானியாவுக்கு சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளதுடன், இதன்போது அதுபற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அரசியல் பிரிவின் முதனிலை செயலாளர் டொம் சொப்பர் (Tom Soper), அரசியல் ஆலோசகர் இன்ஷாப் மாகர் (Insaf Markar) மற்றும் மக்கள் விடுதலை முன்னணியை பிரதிநிதித்துவம் செய்து சட்டத்தரணி தோழர் மது கல்பனா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# வலி தென் மேற்கு பிரதேச சபையால் கர்ப்பிணி தாய்மார்களுக்கு போசாக்குணவு வழங்கப்பெற்றது





2025ம் ஆண்டுக்கான பாதீட்டு நிதி மூலம் பொருளாதார ரீதியாக வசதி குறைந்த கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான போசாக்குணவு வழங்கும் நிகழ்வானது 14.11.2025 வெள்ளிக்கிழமை அன்று இடம்பெற்றது.

ஆனைக்கோட்டை, மானிப்பாய் உப அலுவலகங்களுக்குட்பட்ட பிரதேச பயனாளிகளுக்கு பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு.ப 10.00 மணிக்கு வழங்கி வைக்கப்பெற்றது.

நிகழ்வில் தவிசாளர் சபையின் செயலாளர் உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வடக்கில் இன்றும் 14 முடி திருத்தும் நிலையங்களை இராணுவத்தினர் நடத்துகின்றனர்

- ந.லோகதயாளன்

வடக்கில் இராணுவத்தினர் இன்றும் 14 முடி திருத்தும் நிலையங்கள நடத்தும்போதும் ஒரேயொரு முடி திருத்தும் நிலையத்தை மட்டும் நடத்துவதாக நாராளுமன்றில் ஜே.வி.பி அமைச்சர் பொய்யுரைப்பதாக அழகக சங்கங்களின் சம்மேளனம் தமது கடும் கண்டணத்தை தெரிவித்துள்ளது.

வடமாகாணத்திற்குட்பட்ட இடங்களில் இராணுவத்தினரால் வன்னி பகுதியில் ஒரேயொரு முடி திருத்தும் நிலையம் மட்டுமே நடத்தப்பட்டு வருகின்றது என அமைச்சர் பிமல் ரத்நாயக்கா நாராளுமன்றில் தெரிவித்திருந்தார். இவ் விடயம் தொடர்பில் இதற்கு வடமாகாண முடி திருத்தும் நிலையங்கள சங்கங்களின் சம்மேளனம் கடும் கண்டனத்தை வெளியிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளது.

குறிப்பாக வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காங்கேசன்துறை தொண்டமானாறு வீதியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் ஓர் முடி திருத்தும் நிலையம் இராணுவத்தால் நடத்தப்பட்டு வருவதுடன்.

வவுனியாவில் பம்பைமடு இராணுவ முகாம், வவுனியா சிறைச்சாலைக்கு முன், ஈரட்டை பெரியகுளம் இராணுவ முகாம் மற்றும் பரிச்சங்குளம் இராணுவ முகாமிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் விசுவமடு புன்னைநீராவியடியிலுள்ள சிவில் பாதுகாப்பு திணைக்களம் இணைந்த கட்டளைத் தலைமையகத்திலும், அக்கராயன்குளம் பகுதியில் முருகண்டி விஷேட படையணி இராணுவ முகாம் முன்பாகவும் நடாத்தபடுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முருகண்டி கால்நடை பயிற்சி கல்லூரியடி இராணுவ முகாம், முருகண்டி எரிபொருள் நிரப்பு நிலையம் அருகாமையுள்ள இராணுவ முகாம், மற்றும் கோப்பாபுலவு கொண்டமடு வீதி 59ம் படைப்பிரிவினுள் மூன்று முடி திருத்தும் நிலையங்கள் நடாத்தப்பட்டு வருவதுடன் மன்னார் மாவட்டத்தில் கள்ளியடி இலுப்பைக்கடவை மற்றும் திருக்கேதீச்சரம் முள்ளிப் பள்ளத்திலும் இராணுவத்தினரால் முடி திருத்தும் நிலையங்கள் இன்றுவரை நடாத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு இராணுவத்தினர் சிகை அலங்கரிப்பு நிலையங்களை நடாத்துவதால் சிகை அலங்கரிப்பாளர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைவதாகவும் குறித்த நிலையங்களை மூடுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகரின் பிள்ளைகளை பராமரித்த பேத்தியார் உயிரிழந்துள்ளார்



தமிழ் அரசியல் கைதியாக 17 ஆண்டுகள் சிறையில் இருக்கும் ஆனந்தசுதாகரின் மனைவி கடந்த 2018 ஆம் ஆண்டு கணவரின் பிரிவால் நோயுற்ற நிலையில் மரணமானார்.

இதனால் அநாதரவாக நிர்க்கதியாக நின்ற பிள்ளைகளை வயதான காலத்திலும் பராமரித்து வந்த பேத்தியாரான கமலா (வயது 75) என்பவர் நோயுற்று கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிற்சை பலனின்றி 18ம் புதன்கிழமை இரவு உயிரிழந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை வைத்திசாலையில் பார்வையிட்டு வந்த நிலையில் இத்துயரச் செய்தி இரவு வந்தது.

தந்தையார் சிறையில் வாடுகின்ற நிலையில், பேத்தியும் இவ்வாறு உயிரிழந்த சம்பவம் சிறுவர்களாக இருக்கும் ஆனந்த சுதாகரனின் பிள்ளைகளுக்கு மாத்திரமின்றி தமிழ் மக்களுக்கு ஒரு பேரதிர்ச்சியையும், துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் நீரழிவு நோய் தொடர்பான விழிப்பூட்டல்!

உலக நீரழிவு தின விழிப்பூட்டல் செயலமர்வு 18ம் திகதி அன்றையதினம் கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த செயலமர்வின் போது நீரழிவு நோய், உயர் குருதி அமுக்கம், கொலஸ்ட்ரால் போன்ற மூன்று புத்தகங்களை தமிழில் எழுதி வெளியிட்ட வைத்திய நிபுணர் வைத்தியர் செல்லத்துரை பிரசாத், யாழ் நீரழிவு கழகத்தினரால் கௌரவிக்கப்பட்டார். கண் வைத்திய நிபுணர் வைத்தியர் மலரவன், சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணர் பீ.பாலகோபி, யாழ். நீரழிவு கழக தலைவர் தி.மைக்கல் ஆகியோரால் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.





இதன்போது வைத்தியர் செ.பிரசாத்தினால் 300 புத்தகங்கள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு யாழ். நீரழிவு கழகத்தினரால் இலவச பரிசோதனைகள், விழிப்புணர்வுகள், செயலமர்வுகள் பல இடங்களில் மக்களுக்கு இலவசமாக செயல்படுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

# கண்டாவளை பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த அவசிமான கலந்துரையாடல்

கிளிநொச்சி - முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ் மா அதிபரின் ஏற்பாட்டில், கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் கண்டாவளை பிரதேச செயலகத்தில் 18-11-2025 அன்று நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்கதிபர் எஸ்.முரளிதரன், கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஏ.சந்திரசேன, உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்கள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், கனிய வளத்திணைக்கள அதிகாரிகள், வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்தவது தொடர்பாகவும் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

புூ. கஜிந்தன்

# ராஜபக்ச, ரணில் வழியிலா அநுர நீங்களும்?

## திருகோணமலை விவகாரம் குறித்து தென்னிந்திய இயக்குநர் வ.கௌதமன் கேள்வி!



கடந்த காலங்களில் இனவாத ரீதியாக செயற்பட்ட ஆட்சியாளர்களான ராஜபக்சே, ரணில் ஆகியோரின் பாதையிலா அநுரகுமார திசாநாயக்க நீங்களும் பயணிக்கின்றீர்கள்? என தென்னிந்திய பிரபல இயக்குனரும் தமிழ்ப் பேரரசு கட்சியின் நிறுவனருமாகிய வ.கௌதமன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, நீங்கள் இனவாதம் அற்ற ஒருவர் என நம்பி உங்களுடைய தேசிய மக்கள் சக்திக்கு எங்கள் தமிழர்கள் பெருவாரியான வாக்குகளை அளித்திருந்ததை கடந்த பொதுத்தேர்தலில் நாங்கள் கண்கூடாக பார்த்திருந்தோம். ஆனால் திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவத்தை பார்க்கின்றபோது கடந்த கால ஆட்சியாளர்களின் வழியிலா அநுரகுமார திசாநாயக்கவும் என்ற கசப்பான கேள்வி எழுகின்றது.

தமிழர்களின் தலைநகரான திருகோணமலை மண்ணில் சட்டவிரோதமாக வைக்க முயற்சித்த புத்தர் சிலையை அகற்றுமாறு கோரி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டபோது அங்கு பதற்றம் ஏற்பட்ட நிலையில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால அந்த புத்தர் சிலையை அங்கிருந்து எடுத்து செல்லுமாறு கூறியபோது நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம். ஆனால் அந்த மகிழ்ச்சி சில மணிநேரமே நீடித்தது என்பது வேடிக்கையாகவும், வேதனையாகவும் உள்ளது.

சட்டவிரோத புத்தர் சிலையை அகற்ற சொல்லிய உங்களது அரசாங்கமே மீளவும் அங்கே அந்த சிலையை வைக்குமாறு கூறியது. அப்படியானால் உங்களது கட்சி மீது எங்கள் மக்கள் வைத்த நம்பிக்கை வீண்போனதா? மக்களின் நாயகன் என உங்களை போற்றிய எம்மக்களின் கனவு மண்ணோடு மண்ணானதா? ஈழ தேசத்தில் பூர்வீகமாக வாழும் தமிழ் மக்களின் நெஞ்சங்கள் தொடர்ந்தும் வெந்தழலில்தான் வேக வேண்டுமா?

அடித்தவன் தொடர்ந்து அடிக்கும்போது ஏற்படுகின்ற வலியை விட அணைப்பதுபோல் அணைத்துவிட்டு அதே கரங்களால் அடிக்கின்ற வலி என்பது சொல்லில் அடங்காத ஒரு பெருவலி. இலங்கையின் அதிபராக இருக்கின்ற தாங்கள் இதனை உணரவில்லையா?

எமது தொப்புள் கொடி உறவுகளின் உணர்வுகளை புரிந்த ஒரு ஜனாதிபதி ஆட்சிக்கு வந்துள்ளார் என தமிழகத்தில் இருந்து நாங்கள் சற்று ஆறுதலடைந்ததுடன் கொஞ்சம் நிம்மதியாகவும் மூச்சு விட்டோம். ஒரு இரவு தூங்கி காலையில் எழும்போது அந்த நிம்மதி மண்ணோடு மண்ணாகும் வகையிலான இச்செய்தி எங்கள் செவிகளுக்கு கிடைத்தபோது அந்த சோகக் கதையை இனி நாங்கள் யாரிடம் சொல்லியழ?

உங்கள் மீது நாங்கள் வைத்த நம்பிக்கையை நோவதா? அல்லது உங்களை நம்பி வாக்களித்த எம் மக்களை நோவதா? இதனை நாங்கள் எப்படி பார்க்க வேண்டும் என தயவுசெய்து நீங்களே கூறுங்கள். இனியும் எதுவும் கெட்டுப் போகவில்லை, அந்த புத்தர் சிலை விவகாரத்துக்கு தமிழ் மக்களின் விருப்பப்படியான தீர்வை கொடுங்கள். அந்த சிலையை அகற்றுமாறு உத்தரவிட்டு உங்களின் அரசியல் அறத்தை காப்பாற்றுங்கள். அதன் மூலமாவது புண்பட்ட எங்கள் நெஞ்சு ஓரளவேனும் ஆறுதலடையும் என குறிப்பிட்டுள்ளார்.

# பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தின் கலாச்சார நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் வடமராட்சி கிழக்கு கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது!






பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தின் யாழ். வடமராட்சி கிழக்கு பிரதேச பிரிவுக்கு உட்பட்ட பெண்களுக்கான கலாச்சார நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவம் 17ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் வடமராட்சி கிழக்கு கலாச்சார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ் நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் மலர்க்கொத்து கொடுத்து அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து விருந்தினர்களால் மங்கள விளக்கேற்றி வைக்கப்பட்டு, வரவேற்பு நடனம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக இடம்பெற்றன.

பின்னர் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இச் சான்றிதழ்கள், பெண்கள் சம்மந்தமான அடிப்படை சட்ட உரிமைகள் தொடர்பாக பயிற்சியூட்டப் பட்ட பெண்களுக்கு வழங்கப்பட்டன. அதனை தொடர்ந்து விருந்தினர்களுக்கான நினைவுச்சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் சிவலிங்கம் உஷாவும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ரோகிணி, மற்றும் பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தின் இணைப்பாளர் வாசுகி வல்லிபுரமும் கலந்துகொண்டதுடன், மருதங்கேணி கிராம நிர்வாக அலுவலர், பொருளாதார உத்தியோகத்தர் மற்றும் பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தின் உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் பெண்கள் சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னாரில் காற்றாலை மின் திட்டத்திற்கு எதிரான போராட்டம் 105 ஆவது நாளான 15ம் திகதி மாலை நிறைவுக்கு வந்தது

(15-11-2025)

மன்னாரில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த காற்றாலை மின் திட்டத்திற்கு எதிரான போராட்டம் 105 ஆவது நாளான 15-11-2025 அன்றைய தினம் சனிக்கிழமை மாலை நிறைவுக்கு வந்தது.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மாக்கஸ் அடிகளார் அன்றைய தினம் சனிக்கிழமை மாலை போராட்ட களத்தில் விசேட ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்தார்.

இதன் போது மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு எஸ். ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து கொண்டதோடு,போராட்ட களத்தில் அங்கம் வகித்தவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்தார் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார், மக்களின் வாழ்விடங்களையும், வாழ்வாதாரத்தையும், இறுப்பையும் பாதிப்புக்கு உள்ளாக்கி வரும் காற்றாலை மற்றும் கணிய மண் அகழ்வுக்கு எதிரான போராட்டம் அன்றைய தினம் 105 ஆவது நாளை கடக்கின்றது.

ஜனாதிபதி அவர்களின் அமைச்சரவை அறிவிப்பை நாங்கள் சற்று பரிசோதனைக்கு உட்படுத்தினோம். அதற்கமைவாக 105 ஆவது நாளான அன்றைய தினம் சனிக்கிழமை மாலை எமது போராட்டத்தை நிறுத்திக் கொள்ளுகின்றோம்.எமது



போராட்டம் என்ன கோரிக்கைகளை முன் வைத்து முன் னெடுக்கப்பட்டதோ அந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.



எங்களுடைய முக்கியமான கோரிக்கை என்ன என்றால் மன்னார் மண்ணிலே கணிய மணல் அகழ்வுக்கான அனைத்து வித அனுமதிகளும் நிறுத்தப்பட வேண்டும். மேலும் மன்னார் தீவில் அகழ்வு செய்யப்படுகின்ற மணல் மண் தீவை விட்டு வெளியில் கொண்டு செல்லப்படுவது தவிர்க்க வேண்டும்.

கொண்டு செல்லப்படும் மண் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். எனவே அரசாங்கம் கணிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்காது என்ற நம்பிக்கையுடனே இந்த போராட்டத்தை நிறுத்துகிறோம். வெகு விரைவில் அரசாங்கம் கணிய மணல் தொடர்பாக அமைச்சரவை அனுமதியை பெற்று தேசிய கொள்கையாக அதனை அறிவிப்பார்கள் என்பதை நம்பு கின்றோம்.

எதிர்வரும் காலத்தில் எல்லா நடவடிக்கைகளையும் கண்காணித்துக் கொள்ளுவதற்காக எல்லா மக்களையும் உள்ளடக்கிய ஒரு கண்காணிப்புக் குழுவை அரச அதிபர் தலைமையில் உடனடியாக அமைத்து குறித்த குழுவினுடைய கண்காணிப்பின் கீழ் எல்லா விதமான செயல்பாடுகளையும் முன்னெடுப்பது சிறந்ததாக அமையும் என்பதை இப்போராட்ட குழு சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம், என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளி பிரதம மௌலவி எம். அஸீம் கருத்துக்களை தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் தலைமையிலான குழுவினர் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு சென்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் இடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர்.

இதன் போது மன்னார் மறைமாவட்ட ஆயர்,போராட்டக்குழு பிரதிநிதிகள், மன்னார் பிரஜைகள் குழுவின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# மன்னார் தாழ்வுபாடு கடலில் இரு படகுகள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயம்



(15-11-2025)

மன்னார் தாழ்வுபாடு மீன்பிடி துறையில் இருந்து 14ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவரின் படகு ஒன்றும், கடலில் மீன் பிடித்து விட்டு கரை திரும்பிய மீனவர் ஒருவரின் படகு ஒன்றும் மோதிய நிலையில் இரு படகுகளும் கடும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளது.

குறித்த விபத்து தாழ்வுபாடு கடற்கரையில் இருந்து சுமார் 150 மீட்டர் தொலைவில் இடம் பெற்றுள்ளது.

குறித்த படகுகளில் ஒரு படகு கரை திரும்பிய நிலையில், மற்றைய படகு கடலில் மூழ்கிய நிலையில், குறித்த படகு மீட்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும் மூழ்கிய படகில் பயணித்த மீனவர் ஒருவர் 15ம் திகதி அன்று சனிக்கிழமை காலை சிகிச்சைகளுக்காக மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளார்.

குறித்த இரு படகுகளின் உரிமையாளர்களும் குறித்த விபத்து குறித்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மேலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றவர் தொழிலுக்குச் சென்ற மீன்பிடி படகின் வெளி இணைப்பு இயந்திரம் அவர்களின் மீன் வாடியில் வைக்கப்பட்ட நிலையில், மற்றைய படகின் மீனவர்கள் தமது படகு சேதமானதை தெரிவித்து குறித்த வாடியின் கதவை உடைத்து வெளியிணைப்பு இயந்திரத்தை எடுத்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் குறித்தும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மாந்தை மேற்கில் ஆரம்பித்து வைக்கப்பட்ட பொது வளங்களை முகாமை செய்தல் திட்டம்



(18-11-2025)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட பத்து இடங்களில் பொது வளங்கள் முகாமைத்துவம் செய்தல் திட்டத்தின் கீழ் நன்னீர் மீன் பிடியை ஊக்குவிப்பதன் மூலம் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வருமானங்களை அதிகரிப்பதற்கான செயற்றிட்டம் 18-11-2025 அன்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.


ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜெர்மன் அரசாங்கத்தின் நிதி உதவி கீழ் GIZ - SCOPE ஊடாக விழுது நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு செய்யப்பட்டு வருகின்ற குறித்த செயற்திட்டத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட குளங்கள் மற்றும் தொட்டிகளான சின்ன விளாங்குழி, பெரிய விளாங்குழி, தாமரைக்குளம், மினுக்கன், நெடுங்கண்டல், கன்னாட்டி, சாளம்பன், குமனாயங்குளம், இசங்கங்குளம், காத்தான்குளம் ஆகிய குளங்கள் மற்றும் தொட்டிகளுக்கு 1,14,000 மீன் குஞ்சுகள் வைப்பு செய்யப்பட்டன.

அத்தோடு தொட்டிகளில் உள்ள மீன்களுக்கு தேவையான உணவுகள் மற்றும் எல்லா குளங்களுக்கும் மீன் அறுவடை செய்வதற்கான வலைகளும் கையளிக்கப்பட்டது.

குறித்த மீன் குஞ்சுகள் வைப்பிலிடும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாந்தை மேற்கு பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் திரு. அன்ரனிஸ், சிறப்பு விருந்தினராக GIZ- SCOPE, சிரேஷ்ட ஆலோசகர் சொர்ணம் பெர்னாண்டோ, கௌரவ விருந்தினர்களாக காத்தான்குளம் பங்கு தந்தை செல்வநாதன் பீரிஸ், விழுது அமைப்பின் ஊழியர்கள், NAQDA ஊழியர்கள், கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர், மாதர் அபிவிருத்தி ஒன்றிய பிரதிநிதி நிதிகள், கிராம அபிவிருத்தி சங்க உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு வைபவ ரீதியாக மீன்களை விடும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.


**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்கூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கனடிய செய்திகள்
Canadian News

# HERITAGE BEYOND BOARDERTS அமைப்பானது கடந்த வாரம் ரொறன்ரோவில் நடத்திய பல் கலாச்சார விருது வழங்கும் விழாவில் இரு தமிழ் ஊடகவியலாளர்களுக்கு உயர் கௌரவம்





கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் பல்லின மக்களை ஒன்றிணைக்கும் அமைப்பான HERITAGE BEYOND BOARDERTS அமைப்பானது 15ம் திகதி சனிக்கிழமையன்று ரொறன்ரோ மாநகரில் நடத்திய பல்கலாச்சார விழா மற்றும் பல்லினங்களைச் சேர்ந்த வெற்றியாளர்களுக்கு பல் கலாச்சார விருது வழங்கும் வைபவம் அனைத்தும் சிறப்பாக நடைபெற்றன. அமைப்பின் நிறுவனர் NEEL NANDA அவர்கள் கனடாவில் பலம் வாய்ந்த பல்லின ஊடகவியலாளர் அமைப்பான ETHNIC PRESS AND MEDIA COUNCIL OF CANADA இனது ஒரு சிரேஸ்ட உப தலைவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் மேற்படி பல்கலாச்சார விழாவை தனது குழுவினருடன் இணைந்து சிற்பபாக ஏற்பாடு செய்திருந்தார்.

மேற்படி விருதுகள் வழங்கும் பகுதியில் எமது கனடிய தமிழ்ச் சமூக மட்டத்தில் ஊடகம் மற்றும் கலை பண்பாடு ஆகிய தளங்களில் பணியாற்றிய வண்ணம். இரண்டு ஊடகநிறுவனங்களையும் வெற்றிகரமாக நடத்தும் நண்பர்களுக்கு பல்கலாச்சார விருதுகள் வழங்கப்பெற்றன.

Mr. Kengatharan Vinayagamoorthy - GTA Media Inc. மற்றும் இணைய ஊடக நிறுவனத்தின் நிறுவனத் தலைவர் மற்றும் Mr. Ketheeswaran Kumarakulasingam, Thamil Aaram தொலைக் காட்சி மற்றும் இணைய ஊடகம் நிறுவனத்தின் நிறுவனத் தலைவர் ஆகிய இருவரும் மேற்படி பல்கலாச்சார விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

இங்கே காணப்படும் படங்களில் விருதுகளைப் பெற்ற Mr. Kengatharan Vinayagamoorthy, Mr. Ketheeswaran Kumarakulasingam ஆகிய இருவரும் தங்கள் குடும்பத்தினர் மற்றும் HERITAGE BEYOND BOARDERTS அமைப்பின் இயக்குனர் சபை உறுப்பினர் மற்றும் கனடாவில் பலம் வாய்ந்த பல்லின ஊடகவியலாளர் அமைப்பான ETHNIC PRESS AND MEDIA COUNCIL OF CANADA இனது ஒரு சிரேஸ்ட உப தலைவரும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான லோகன் லோகேந்திரலிங்கம் அவர்களும் காணப்பெறுகின்றார்.






# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker

THANA INSURANCE Inc.




Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

# ஒரு புத்தர் சிலையும் நுகேகொடவில் எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டமும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**



திருகோணமலையில் ஒரு புத்தர் சிலை விவகாரமாக மாறி இருக்கிறது. அங்கே உண்மையில் நடந்தது என்ன?

2014 ஆம் ஆண்டு அந்தக் காணியை மஹிந்த ராஜபக்ஷ பௌத்த விகாரைக்கு எழுதிக்கொடுத்தார். ஆனால் அங்கே ஒரு முக்கிய நிபந்தனை இருந்தது. அந்த காணியில் அவர்கள் எந்த கட்டுமானங்களையும் அமைக்க கூடாது. ஏனென்றால் கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் சட்டங்களின்படி பொதுக் கடற்கரையை நோக்கிச் செல்லும் வழிகளில் தனியார் கட்டுமானங்களை அமைப்பதற்கு அனுமதி பெற வேண்டும். ஆனால் அந்த நிபந்தனையை மீறி அங்கே ஒரு ரெஸ்ரோரன்டை கட்டுவதற்கு புத்தபிக்குகள் ஒரு தனியாருக்கு அனுமதி வழங்கியிருந்தார்கள். இந்தத் தனியார் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் ஆகும். அது சட்டவிரோதமான கட்டடம் என்று கூறி சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் போலீசாரின் உதவியுடன் அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு கிழமைக்கு முன் அவ்வாறு எதிர்ப்பு காட்டப்பட்டதையடுத்து அங்குள்ள பௌத்த பிக்கு அந்த கட்டிடத்தில் பிரதான பகுதி தவிர ஏனையவற்றை அகற்றுவதற்கு ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் அவர் அவ்வாறு செய்யாமல் பிரச்சினையை வேறு பக்கமாக திசை திருப்புவது என்று முடிவெடுத்து அங்கே ஓர் அறநெறிப் பள்ளியைக் கட்டப்போவதாகக் கூறி அதற்கு அத்திவாரம் போடும் வேலைகளைத் தொடங்கியதோடு ஒரு சிறிய தற்காலிக கொட்டிலை அமைத்து அதற்குள் ஒரு புத்தர் சிலையையும் கொண்டு வந்து வைத்துவிட்டார்.

அதாவது விவகாரத்தின் மையம் புத்தர் சிலை அல்ல. அந்த வளவுக்குள் ஏற்கனவே மர நிழலில் ஒரு புத்தர் சிலை உண்டு. பல தசாப்தங்களாக காணப்படும் அந்தப் புத்தர் சிலையை தமிழ் மக்கள் எதிர்க்கவில்லை. ஆனால் புதிதாகக் கொண்டுவரப்பட்ட புத்தர் சிலை இங்கு முன் கூறப்பட்ட ரெஸ்ரோரண்ட் விவகாரத்தைத் திசை திருப்பும் நோக்கிலானது என்று அப்பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

புத்தர் சிலையை அகற்றும் முடிவை முதலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எடுத்திருக்கிறது. அதன் விளைவாகத்தான் போலீசார் இரவோடு இரவாக அதனை அகற்றியிருக்கிறார்கள். மாவட்டத்தின் மூத்த போலீஸ் அதிகாரியை பிக்குகள் அவமதித்திருக்கிறார்கள். அங்கே நிலமைகளைக் கையாள்வதற்கு என்று திருகோணமலையைச் சேராத மூன்று பிக்குகள் வெளியிடத்திலிருந்து வந்திருக்கிறார்கள் என்றும் பொதுமக்கள் கூறுகிறார்கள். பிக்குகளால் ஓர் உயர் போலீஸ் அதிகாரி அவமதிக்கப்பட்ட பின்னணியில் மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தவுடன் போலீசார் அந்த சிலையை அகற்றி விட்டார்கள்.

ஆனால் அதை அவ்வாறு அகற்றிய போலீசாரை விடவும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் தரப்புகளை விடவும், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியை விடவும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட நாடாளுமன்றத்தை விடவும், இலங்கைத் தீவின் பௌத்த மகா சங்கம் எவ்வளவு பலமாக இருக்கிறது என்பதைத்தான் அடுத்த நாள் நடந்த நிகழ்வுகள் நிரூபித்தன.

எந்தப் போலீசார் சிலையை இரவோடு இரவாக அகற்றினார்களோ, அதே போலீசார் சிலையை மீண்டும் மேளதாளத்துடன் கொண்டுவந்து நிறுத்தும் அளவுக்கு பௌத்த மகா சங்கம் பலமாகக் காணப்படுகிறது. அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, புத்தர் சிலை சேதமடைவதாக தகவல் காரணமாக அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கை எடுத்ததாக தெரிவித்தார். பாதுகாப்பு காரணங்களுக்காக சிலை அகற்றப்பட்டது என்றும் அது மீண்டும் நிறுவப்படும் என்றும் அவர் தெரிவித்திருந்தார். அவர் கூறியது போலவே சிலை மீண்டும் கடந்த 17 ஆம் தேதி நிறுவப்பட்டுள்ளது.

எனவே இந்த விவகாரத்தின் தொடக்கப் புள்ளியில் புத்தர் சிலை இல்லை. அது சட்டவிரோதக் கட்டுமானம் ஒன்றுக்கு எதிரானது. ஆனால் பௌத்த பிக்குகள் திட்டமிட்டு புத்தர் சிலையை ஒரு முன் தடுப்பாக - buffer ஆகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அவ்வாறு புத்த பகவானை ஒரு முன்தடுப்பாகப் பயன்படுத்துவதுதான் இலங்கைத் தீவின் சிங்கள பௌத்த அரசியல் கலாச்சாரமாக பல தசாப்தங்களாக காணப்பட்டு வருகிறது. அதைத்தான் முஸ்லிம் காங்கிரஸ் தலைவராகிய ரவூப் ஹக்கீம் கிண்ணியாவில் அப்படி ஒரு பிரச்சனை வந்தபோது "அரசாங்கம் புத்தர் சிலைகளை எல்லைக் கற்களாக நகர்த்துகிறது" என்று குற்றம் சாட்டினார்.

எனவே இங்கே விடயம் தெளிவாகத் தெரிகிறது. புத்தர் சிலை பிரச்சினையை திசை திருப்பும் நோக்கத்தோடு உங்களால் உள்ளே கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அங்கே ஒரு புத்தர் சிலை பல தசாப்த காலமாக உண்டு. எனவே இங்கு புதிய புத்தர் சிலையை அவர்கள் ஒரு கவசமாக, திசை திருப்பும் கருவியாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதுதான் உண்மை.

தமிழ் மக்கள் எப்பவும் அச்சத்தோடு பார்ப்பது அதைத்தான். தமிழ்மக்கள் என்றைக்குமே பௌத்தத்தை ஒரு பகை மதமாகப் பார்த்தது கிடையாது. மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஒன்றாக, புத்தர் பார்க்கப்படுகிறார். அறிவுபூர்வமாக பௌத்த மதத்தையும் இந்து மதத்தையும் அணுகும் தரப்புகள் புத்த மதத்தை "சீர்திருத்தவாத இந்து மதம்" - reform Hinduism என்றும் அழைப்பதுண்டு. தமிழ் மக்கள் மதப்பல்வகமைக்கு எதிரானவர்கள் அல்ல. மத மேலாண்மைதான் இங்கு பிரச்சனை.

இலங்கைத் தீவின் அரசியல் யாப்பு அவ்வாறு பெரிய மதத்துக்கு - அதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் - பெரிய இனத்தைச் சேர்ந்த பெரிய மதத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று அதன் ஒன்பதாவது பிரிவில் கூறியுள்ளது. அது இலங்கைத் தீவின் தேரவாத பௌத்தத்தை ஏறக்குறைய அரச மதமாக மேலுயர்த்தியுள்ளது.

புத்த பகவான் உலகியல் ஆசைகளைத் துறந்து சன்னியாசி ஆகியவர். நிலையாமையைப் போதித்தவர். ஆனால் அவருடைய போதனைகளைப் பின்பற்றுவதாகப் பெருமைப்பட்டுக் கொள்ளும் இலங்கைத்தீவின் அரசியல் கலாச்சாரத்தில், அரசியல்வாதிகள் பௌத்த மதத்தை ஆக்கிரமிப்பின் கருவியாக மாற்றி விட்டார்கள். இத்தகைய பொருள்படக்கூறின் இலங்கைத் தீவின் இனப்பிரச்சினை என்பதே இலங்கைத்தீவின் பௌத்த மத சந்நியாசிகளும் அரசியல்வாதிகளும் புத்த பகவானின் போதனைகளை பின்பற்றத் தவறியதுதான்.

புத்த பகவான் சாதி ஒடுக்கு முறைக்கு எதிராக எழுச்சி பெற்றவர். ஆனால் இலங்கைத் தீவின் மகா சங்கத்துக்குள்ளையே சாதி அடுக்குகள் உண்டு. அதைவிடக் கொடுமையான விடயம் என்னவென்றால், பௌத்தபிக்குகள் அணியும் காவி உடையிலும் சாதி உண்டு என்பதுதான். அதாவது சாதி ரீதியாக உயர்ந்த நிலைகளில் இருக்கும் பிரிவுகளைச் சேர்ந்த பிக்குகள் இந்துக்கள் அணிவது போன்ற காவி உடையை அணிவார்கள். ஆனால் ஒடுக்கப்பட்ட சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரிவுகள் செங்கட்டிச் சாவி நிறக் காவியை அணிவார்கள்.

சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய அம்பேத்கர் பௌத்த மதத்திற்கு மதம் மாறினார். அவர் இலங்கைத் தீவின் மகா சங்கத்தினரின் விருந்தாளியாக இங்கு வந்து தங்கியிருந்த காலகட்டத்தில் மகா சங்கத்துக்குள் சாதி ஏற்றத்தாழ்வுகள் இருப்பதைக் கண்டு, மனம் நொந்து நாடு திரும்பினார். காவிக்குள் சாதியை வைத்திருக்கும் சன்னியாசிகள், அரசியலில் என்ன செய்வார்கள்? புத்தர் சிலையை ஒரு முன்தடுப்பாக, கவசமாகப் பயன்படுத்துவார்கள்தானே?

ஆனால் அது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை நிர்வாணமாக்கியிருக்கிறது. இந்த அரசாங்கம் தன்னை முன்னைய மேட்டுக்குடி அரசாங்கங்களில் இருந்தும் வித்தியாசப்படுத்திக் காட்டமுயன்றது. தாங்கள் இனவாதத்துக்கு தலைமை தாங்கவில்லை என்று அது எப்பொழுதும் கூறிக்கொண்டது. முன்னைய அரசாங்கங்கள்தான் தேர்தல் தேவைகளுக்காக இனவாதத்தைக் கிளப்பின, இனவாதத்தைக் கையாண்டன என்று தேசிய மக்கள் சக்தி கூறியது. தனக்கும் இனவாதத்துக்கும் சம்பந்தம் இல்லை என்பதுபோல அது காட்டிக்கொண்டது. தமிழ்ப் பகுதிகளில் அதற்குக் கிடைத்த எட்டு ஆசனங்களை வைத்து அதை அவர்கள் அனைத்துலக அளவிலும் கூறிவருகிறார்கள். ஆனால் புத்தர் சிலை விஷயத்தில் அரசாங்கத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பௌத்த மகா சங்கத்திடம் தோல்வி அடைந்துவிட்டது.

அந்தத் தோல்விக்கு அவர்கள் பொறுப்பேற்கத் தயார் இல்லை. மாறாக எதிர்க்கட்சிகளைக் குற்றம் சாட்டுகிறார்கள். திருகோணமலையில் சம்பந்தப்பட்ட காணியில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட ரெஸ்ரோரன்ட் ஒரு ஐக்கிய தேசிய கட்சி முக்கியஸ்தருக்குரியது. எனவே இந்த விடயத்தில் எதிர்க்கட்சிகள் நேரடியாகச் சம்பந்தப்படுகின்றன என்று அரசாங்கம் கூறக்கூடியதாக உள்ளது. வரும் 21ஆம் திகதி எதிர்க்கட்சிகள் நுகேகொடவில் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றை ஒருங்கிணைத்து வருகின்றன. இனவாதத்தைத் தூண்டுவதன்மூலம் இந்த ஆர்ப்பாட்டத்தை உணர்ச்சிகரமானதாக மாற்றி, அதில் மக்களைத் திரட்டுவதற்கு எதிர்க்கட்சிகளின் கூட்டு முயற்சிக்கிறது என்று அரசாங்கம் குற்றம் சாட்டுகிறது. கடந்த ஓராண்டுக்கு மேலான காலப்பகுதியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் காட்டப்போகும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஓர் எதிர்ப்பாக அது அமையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின் எதிர்க்கட்சிகள் முதல் தடவையாக ஒன்றுதிரண்டு ஒரு பெரிய எதிர்ப்பைக் காட்டவிருக்கும் பின்னணிக்குள், திருமலையில் புத்தர் சிலை ஒரு விவகாரமாக மாறியிருக்கிறது. எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு எதிரான ஒரு பெரிய ஆர்ப்பாட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில், இது வேண்டுமென்று எதிர்க்கட்சி அரசியல்வாதிகளால் வலிந்து உருவாக்கப்பட்ட ஒரு பிரச்சினை என்று அரசாங்கத்திற்கு சார்பான தமிழ் புத்திஜீவி ஒருவர் முகநூலில் எழுதுகின்றார்.

அதாவது எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துவதற்கு இனவாதத்தை மீண்டும் கையில் எடுக்கின்றன என்று அரசாங்கத்துக்கு ஆதரவான புத்திஜீவிகள் கூறுகிறார்கள். இவ்வாறு கூறுவதன்மூலம் அவர்கள் அரசாங்கத்தை இனவாத பண்பு இல்லாதது என்று நிரூபிக்க முயல்கிறார்கள். ஆனால் இந்த விடயத்தில் அரசாங்கம் இனவாதிகளைத் திருப்திப்படுத்த முயற்சிக்கிறது என்று தமிழ் மக்கள் குற்றச்சாட்டுகிறார்கள்.

அரசாங்கம் முதலில் சிலையை அகற்றுகிறது. பின்னர் மீண்டும் அந்தச் சிலையைக் காவிக் கொண்டு வந்து நிறுத்துகிறது. இதன்பொருள் இனவாத சக்திகளின் தூண்டுதலுக்கு அரசாங்கம் பணிந்து விட்டது என்பதுதான். இவ்வாறு இனவாதிகளுக்குப் பயந்து ஒரு புத்தர் சிலையைக்கூட அசைக்கமுடியாத அரசாங்கம் எப்படி அரசியலமைப்பை மாற்றும்? பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் என்று எதிர்பார்ப்பது?

இது மாவீரர் மாதம். நாட்டில் குறிப்பாக தமிழ்ப் பகுதிகளில் அரசியல் சூழல் உணர்ச்சிகரமானதாக இருக்கும் ஒரு காலகட்டம். இக்காலகட்டத்தில் தென்னிலங்கையில் இனவாதத்தைக் கிளப்பி விடுவது இலகுவானது. அதனால் வரும் 21 ஆம் திகதி நுகேகொடவில் கூட உள்ள எதிர்க்கட்சிகள் தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்குச் சாதகமான இனவாதச் சூழலை உற்பத்தி செய்ய முற்படுகின்றன என்று தேசிய மக்கள் சக்தி கூற முயற்சிக்கின்றது.

ஆனால் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பை மாற்ற அந்த அரசாங்கத்தால் முடியாது என்பதைத்தான் திருக்கோணமலை புத்தர் சிலை விவகாரம் தமிழ் மக்களுக்கு உணர்த்தியிருக்கிறது.

*"செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்*
*தேன் வந்து பாயுது காதினிலே -*
*எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு*
*சக்தி பிறக்குது மூச்சினிலே"*
**- மகாகவி பாரதி**

# அயலகத் தமிழர் நாள் திருவிழா

உலக செய்திகள் World News

## சென்னை

திரைகடல் ஓடியும் திரவியம் தேடச் சென்ற தமிழர்களின் உலகளாவிய தாக்கத்தைப் போற்றும் விதமாகவும், அவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு சார்பில் அயலகத் தமிழர் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. இத்திருவிழா எதிர்வரும் (2026) சனவரி 11,12 ஆகிய நாள்களில் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் சிறப்பாக நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு நாடுகளிலிருந்து பங்குபெறும் அரசு மற்றும் மக்கள் பிரதிநிதிகள், உலகெங்கும் உள்ள சாதனைத் தமிழர்கள் என அனைவரும் கலந்து கொள்ள உள்ளனர். இத்திருவிழா மொழி, வரலாறு, கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களின் சங்கமமாகும். கலாச்சாரம், புதுமை, கல்வி மற்றும் உலகளாவிய வளர்ச்சியில் சிறந்த பங்களிப்பு செய்தோருக்கான உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் விருதுகளும் இந்நிகழ்ச்சியில் வழங்கப்பட உள்ளன. கடந்த முறை போலவே இந்த முறையும், பேரவை சார்பில் அமெரிக்க வாழ்வியலைப் பற்றிய பல்வேறு தகவல்களுடன் சாவடி ஒன்றும் அமைக்கவுள்ளோம்.

அமெரிக்க வாழ் தமிழர்களான நாம், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை எனும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபட்டு இவ்விழாவில் கலந்துகொண்டு, தமிழர் ஒற்றுமையை பறைசாற்ற பேரவை சார்பில் அன்புடன் அழைக்கிறோம்.

நிகழ்ச்சிக்குப் பதிவு செய்ய https://nrtamils.tn.gov.in/nrtday/register
இறுதி நாள்: Dec-18, 2025
விருதுகளுக்கு விண்ணப்பிக்க https://nrtamils.tn.gov.in/nrtday/awards

# மெட்ரோ ரெயில் என்பது ஆடம்பரம் அல்ல..அவசியமான உள்கட்டமைப்பு என்கிறார் தமிழக அமைச்சர் தங்கம் தென்னரசு



மத்திய அரசு விரிவான திட்ட அறிக்கையைக் கேட்டு அதனைத் திருப்பியனுப்பியிருக்கிறது.

மதுரை, கோயம்புத்தூர் நகரங்களுக்ககான மெட்ரோ ரெயில் திட்டத்தை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்து, அதற்கான திட்ட விரிவாக்க அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பியிருந்தது. இந்த நிலையில் மத்திய அரசு விரிவான திட்ட அறிக்கையைக் கேட்டு அதனைத் திருப்பியனுப்பியிருக்கிறது. இது குறித்து தனது எக்ஸ் தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள தமிழ்நாடு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மதுரையும், கோவையும் தமிழ்நாட்டின் பெருமைமிகு நகரங்கள். இவை இரண்டும் இந்தியாவின் வேகமாக வளரும் நகரங்களில் முக்கியமானவை. இந்நகரங்களுக்கு மெட்ரோ ரயில் என்பது ஆடம்பரம் அல்ல் அவசியமான உள்கட்டமைப்புத் தேவை.

மக்கள் நெருக்கடியைக் குறைப்பது, பொருளாதாரத்தை மேம்படுத்துவது, என அனைத்துக்கும் மெட்ரோ இன்றியமையாதது. ஒன்றிய பாஜக அரசின் பாகுபாட்டை எதிர்த்து, தமிழ்நாடு மக்களின் நியாயமான உரிமைக்காகவும், எதிர்கால வளர்ச்சிக்காகவும் மதுரை மற்றும் கோவை மெட்ரோ ரெயில் திட்டத்தை வழங்கக் கோரி தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுப்பிய குரலுக்கு முழு ஆதரவு தெரிவிப்போம் எனக் கூறியுள்ளார்.

# காங்கிரஸ் கட்சி இளைஞர் அணி தலைவராக வர விஜய் விரும்பினார் என்ற அதிர்ச்சியை வெளியிட்ட பொய்யர் சிதம்பரத்தின் மகன் கார்த்திக் எம்.பி.



த.வெ.க. தலைவர் விஜய், ராகுல் காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தியது உண்மை என கார்த்தி சிதம்பரம் எம்.பி. கூறினார்.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு அரசியல் கட்சிகள் கூட்டணி அமைப்பது, வேட்பாளர்களை தேர்வு செய்வது உள்ளிட்ட தீவிர பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த தேர்தலில், விஜய் தலைமையிலான த.வெ.க.வும் போட்டியிட தயாராகி வருகிறது. அதற்கேற்ப ஆட்சியில் பங்கு என அவர் அறிவித்தது, கூட்டணி கட்சிகளை தன்பக்கம் ஈர்ப்பதற்கான முயற்சியாக பார்க்கப்பட்டது. எனினும், தொடக்கத்தில் இருந்து, பா.ஜ.க.வை கொள்கை எதிரி என்றும் தி.மு.க.வை அரசியல் எதிரி என்றும் பேசி வருகிறார். இதனால், அக்கட்சிகளுடன் கூட்டணிக்கான சாத்தியம் குறைவு என பார்க்கப்படுகிறது. அ.தி.மு.க. மீது விஜய் எந்தவொரு பெரிய விமர்சனமும் வைக்கவில்லை. எனவே விஜய் அ.தி.மு.க.வுடன் இணைவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று பேசப்பட்டது. ஆனால், ஆட்சியில் பங்கு, முதல்-அமைச்சர் பதவி போன்றவற்றால், பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. இணையும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. எனினும், அ.தி.மு.க.வையும், விஜய் விமர்சிக்க தொடங்கினார். இந்நிலையில், தேசிய அரசியலில் கால்தடம் பதிப்பதற்கும் தி.மு.க. கூட்டணியில் இருந்து காங்கிரசை வெளியே கொண்டு வந்து அவர்களோடு இணையலாம் என்ற நோக்கில் அவர் ராகு.

# காங்கிரசில் சேர விஜய் முயற்சி செய்தார் என்பதை உறுதிப்படுத்திய ஜோதிமணி எம்.பி.



கரூர் நாடாளுமன்ற தொகுதி காங்கிரஸ் எம்.பி.ஜோதிமணி கரூரில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: சமூக வலைதளங்கள் காங்கிரஸ் - தமிழக வெற்றி கழகத்துடன் கூட்டணி அமைக்க உள்ளதாக ஆதாரமற்ற தகவல்களை வெளியிடுகின்றன. ஆனால் காங்கிரசுக்கு விஜய் அறிமுகம் இல்லாதவர் அல்ல. காங்கிரஸில் சேருவது குறித்து விவாதிக்க 2010 ல் அவர் ராகுல் காந்தியை சந்தித்தார். ஆனால் பல்வேறு காரணங்களால் அது நடக்கவில்லை. கரூர் துயர சம்பவத்தின் போது மற்ற காங்கிரஸ் தலைவர்களை போலவே விஜய்யிடம் ராகுல் காந்தி பேசினார்.

சமூக ஊடகங்களில் நாம் பார்ப்பதை அடிப்படையாகக் கொண்டு கூட்டணிகளை முடிவுக்கு கொண்டு வர முடியாது. நாங்கள் ஏற்கனவே திமுக கூட்டணியில் உறுதியாக இருக்கிறோம். கூட்டணி விஷயங்களை பற்றி விவாதிக்க இன்னும் நேரம் இருக்கிறது. தற்போது நடைபெற்று வரும் எஸ்.ஐ.ஆர் என்பது வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் கிடையாது. குடியுரிமை திருத்தம். பா.ஜ.க. ஆளும் அசாம் மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் செய்யாமல் வாக்காளர் பட்டியல் திருத்தம் மட்டும் செய்கின்றனர். இதற்கு அஸ்ஸாமில் நடத்தப்பட்ட தேசிய குடிமக்கள் பதிவேடு தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்று கூறுகின்றனர். இதுபோல எஸ்.ஐ.ஆர் வழக்கும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் பா.ஜ.க. ஆட்சி பொறுப்பில் இல்லாத தமிழகம், கேரளாவில் எஸ்.ஐ.ஆர் செயல்படுத்துவதன் நோக்கம் என்ன? தேர்தல் ஆணையம் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் ஒரு நிலைப்பாடும் பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில் வேறு ஒரு நிலைப்பாடும் என இரட்டை நிலைபாடுகளுடன் செயல்படுகிறது. பா.ஜ.க.வின் ஒரு அணி போல தான் தேர்தல் ஆணையம் செயல்படுகிறது என்றார்.


கனடாவின் பனிக் காலத்தை
யாழ்ப்பாணத்தில் நிம்மதியாக கழித்திட

கனடாவின் பனிக் காலத்தை யாழ்ப்பாணத்தில் நிம்மதியாக கழித்திட விரும்புகின்றீர்களா?
யாழ்ப்பாணம் மானிப்பா நகரத்திற்கு அருகில்
சகல வசதிகளுடன் கூடிய அழகிய வீட்டை மாதாந்த
அடிப்படையில் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
Visnu: 0094 77515 6292
0094 77515 5331
WhatsApp: 44 7957 561 555



TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யார் ஆட்சிக்கு வந்தாலும் பௌத்த சிங்கள மயமாக்கல் தொடருவது ஏன்?

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேள்வி!

புு. கஜிந்தன்



அந்த அமைப்பு மேலும் தெரிவிக்கையில், திருகோணமலையில் தமிழர் தாயகத்தில் கடற்கரைப்பிரதேசத்தில் சட்டத்திற்கு முரணாக புத்த பிக்குகளினால் புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டிருக்கின்றது. அங்குள்ள தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பின் பின் சட்ட அனுமதியற்ற கட்டுமானம் என்று சொல்லி ஸ்ரீலங்கா பொலீசாரினால் அப்புறப்படுத்தப்படுகின்றது. இதன்பிறகு பாராளுமன்றத்தில் அரசாங்கத்தால் புத்தர்சிலையின் பாதுகாப்பு காரணமாக தான் அப்புறப்படுத்தப்பட்டது மீண்டும் நிறுவப்படும் என்ற பின் மீண்டும் அதே இடத்தில் அரசாங்கத்தால் புத்தபிக்குகள் மற்றும் பொலீசாருடன் இணைந்து அதே புத்தர் சிலை நிறுவப்படுகின்றது. மாற்றம் என்று சொல்லி இனவாதமற்ற புதிய அரசியல் கலாச்சாரம் ஒன்று உருவாகும் என்று நம்பி வாக்கு செலுத்திய தமிழ் மக்கள் இன்று முழுவதுமாக அரசினால் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். இது இன்று நேற்றில்லை 76 வருடகாலமாக இந்த நாட்டில் இது தான் நடந்தேறியிருக்கின்றது.

சட்டமுரணாக தமிழர் தாயகத்தில் வைக்கப்பட்டிருந்த புத்தர்சிலை அகற்றப்பட்ட பின் பாராளுமன்றத்தில் மீண்டும் நிறுவுவோம் என்று குறிப்பிட்டு மீள சிலையை மக்களின் எதிர்ப்புக்களை மீறி நிறுவியிருக்கும் செயல் எந்த அரசு அதிகாரத்திற்கு வந்தாலும் சிங்கள பேரினவாதப்போக்கு மாறாது என்பதையே உணர்த்துகின்றது.புத்தர் சிலையின் பாதுகாப்பு கருதி அகற்றப்பட்டிருக்கின்றது என்று சொல்லுவது தொடர்ச்சியாக சிங்கள மக்களிடத்தில் தமிழர்களை தீயவர்களாக சித்தரிப்பதைத் தான் எடுத்துக்காட்டுகிறது.புத்தர் சிலையை வைத்தது யார்? அமைதியாக தங்கள் அன்றாட வாழ்க்கையை வாழும் தமிழ் மக்களை குழப்பியது யார்? புத்தர் சிலையை அகற்ற வந்த பொலீசாரின் கன்னத்தில் அறைந்தது யார்? இவர்களுக்கு எதிராக எல்லாம் இந்த நாட்டில் சட்டம் செயற்படாதா? நாட்டின் ஆட்சியாளர்கள் மக்களுக்கான சேவையை ஆற்றுவதைக்காட்டிலும் புத்த பிக்குகளின் பேச்சை வேதவாக்காக கேட்டு நடப்பதையே இனப்பிரச்சினை தொடங்கிய காலகட்டத்திலிருந்து அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

ஏன் இனப்பிரச்சினையின் முக்கியகாரணமே சிங்களபௌத்தமயமாக்கல் தான்.யுத்தத்தின் ஆணிவேரும் இது தான். தொடர்ச்சியாக தமிழர் நிலங்கள் புத்த வழிபாடு என்ற பெயரிலே பௌத்த சிங்களமயமாக்கப்பட்டுக்கொண்டே இருந்து வந்துள்ளது. சிங்கள குடியேற்றங்களால் தமிழர் குடியேற்றப்பரம்பல் மாற்றியமைக்கப் பட்டுக்கொண்டே இருந்து வந்துள்ளது. வரலாற்றில் மகாவலி ஓயா மற்றும் கல் ஓயா குடியேற்றம் என்று தமிழர் நிலங்கள் முற்றுமுழுதாக பெயர் மாற்றம் பெற்று முழுவதுமாக மாறியிருக்கிறது. தொடர்ச்சியாக இன்றுவரை தமிழர்களின் தொல்லியல் நிலங்களான குருந்தூர் மலை, வெடுக்குநாறிமலை, உகந்தை மலை என்று பல்வேறு இடங்களில் பௌத்த ஆக்கிரமிப்பு நடைபெறுகின்றது. தையிட்டி,திரியாய் என்று தமிழர் நிலங்களும் இதில் இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றது. இதில் இருந்து தமிழ் மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் யார் ஆட்சிக்கு வந்தாலும் ஒரு விடயம் தவறாமல் நடக்கும். அது சிங்கள பௌத்தமயமாக்கல். ஏன் என்றால் அது திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்ச்சி நிரல். தமிழ் மக்களின் இனப்பரம்பலை மாற்றுவதென்பது மாறி மாறிவரும் சிங்கள ஆட்சியாளர்களால் காலத்திற்கு காலம் நிகழ்ந்தேறிக்கொண்டே இருந்து வந்துள்ளது.

சிங்கள மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் தமிழ் மக்கள் சிங்கள மக்களின் வழிபாட்டிற்கு என்றுமே எதிரானவர்கள் இல்லை. நாங்கள் அனைத்து மதத்தையுமே சமமாக மதிப்பவர்கள். அனைத்து சமய வழிபாடுகளையும் மதித்து நடப்பவர்கள் அவமதிப்பது கிடையாது. ஆனால் வழிபாடு என்ற பெயரிலே திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புக்களால் தமிழருடைய நிலங்கள் பறிபோவதென்பதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டோம். தமிழர் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அவற்றிற்கு பல்வேறு கட்டுக்கதைகள் கட்டப்பட்டு பௌத்த நிலமாக மாறுவதற்கு எதிரானவர்கள். தமிழருடைய பூர்விகம் கேள்விக் குறியாக்கப்படுவதற்கு எதிரானவர்கள். தமிழருடைய தொல்லியல் ரீதியான நிலம் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிரானவர்கள். தமிழர் குடியேற்றப்பரம்பல் மாற்றியமைக்கப்படுவதற்கு எதிரானவர்கள். தமிழர்களுடைய இனவிகிதத்தை திட்டமிட்டு மாற்றுவதற்கு எதிரானவர்கள். நாங்கள் ஏன் ஒற்றையாட்சி அரசியலமைப்பை மறுக்கின்றோம் தெரியுமா? இதனால் தான். சிங்கள பௌத்த பேரினவாத்ததிற்கு அடிபணிந்து கிடப்பதனால் தான்.

இங்கே முதலில் சுற்றுலாத்தளமான கடற்கரையில் புத்தர் சிலையை அமைப்பதற்கான அனுமதி வழங்கியது யார்? பிரதேச சபையிடமிருந்தோ இல்லாவிட்டால் நகர சபையிடமிருந்தோ அனுமதிபெறப்பட்டதா? இல்லை. முற்றமுழுதாக புத்தபிக்குகளே இலங்கையின் நிரந்தர நிறைவேற்று ஜனாதிபதிகளாக இருந்து வந்துள்ளனர். சுருக்கமாக சொல்லுவதென்றால் நாட்டின் அரச இயந்திரம் புத்த பிக்குகளுக்கு அடிபணிந்து இருக்கின்றது. முழு சட்டங்களையும் தங்கள் பக்கம் வளைக்கும் வலது சாரிகளின் பக்கம் அரசு முழுவதுமாக திரும்பி நிற்கின்றது. தாங்கள் இடது சாரிகள், கம்யூனிச சிந்தாந்தத்தை உள்வாங்கி கொண்டு செயற்படுவதாக தங்களை தாங்களே கூறிக்கொள்ளும் அரசு நாட்டில் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுபான்மையினரான தமிழ்மக்கள் பக்கம் ஏன் நிற்கவில்லை என்று ஒரு கேள்வி எழுகிறது. இன்னும் எவ்வளவு காலத்திற்கு நாங்கள் அடக்குமுறைகளையும் ஆக்கிரமிப்புக்களையும் தாங்கிக்கொள்ள முடியுமென்று தெரியவில்லை. இந்தப்பிரச்சினையில் ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது இலங்கையின் ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்கும் செயல்.

இது ஏன் இவ்வளவு காலமும் பயங்கரவாத தடைச்சட்டமும் எடுக்கப்படவில்லை அரசியல் கைதிகளும் முழுவதுமாக விடுதலை செய்யப்படவில்லை. இதில் அரசாங்கம் சார்பில் வடக்கு கிழக்கில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்து கொண்டு இருக்கின்றார்கள்? தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக அரசியல் தீர்வுக்காக இது வரை வாய் திறந்திருக்கின்றார்களா?

ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் பின்னால் ஒரு அரசியல் அரங்கேற்றம் நிகழுவதாகவே நாங்கள் கணிக்கின்றோம்.

1. புத்தர் சிலையை வைத்துப்பார்த்து தமிழ் மக்கள் இன்னும் தமிழ் உணர்வுடன் தான் இருக்கின்றார்களா என்று பார்ப்பது. அவர்கள் எதிர்க்கிறார்கள் என்றவுடன் அகற்றுவது சிங்கள மக்களிடத்தில் செல்வாக்கு சரியுமென்ற பின் மீண்டும் நிறுவுவது.

2. அரசாங்கத்தை பலவீனப்படுத்துகின்ற எதிர்கட்சியின் திட்டமிடலாக இருக்கலாம். ஒன்று தமிழ் மக்களிடத்தே பலவீனப்படுத்துவது அல்லது சிங்கள மக்களிடத்தே பலவீனப்படுத்துவது.

3. இறுதியில் புற்றுக்குள்ளே இருந்து வெளியே வந்திருக்கும் பாம்புகளைப்போல் சிலர் வெளியே வந்திருக்கின்றனர். யாரென்று பார்த்தால் கடந்த ஜனாதிபதித்தேர்தலில் தற்போதைய எதிர்கட்சித்தலைவருக்கு ஆதரவளித்தவர்கள், மாவீரர் தினத்தை யார் எடுத்து நடாத்துவது என்று தங்களுக்குள் சண்டையிட்டவர்கள். நீங்கள் உங்களுக்குள் முழுவதுமாக ஒற்றுமை அடையாவிட்டால் எதையுமே சாதிக்க முடியாது.

இறுதியாக எந்தவொரு சிங்களபேரினவாத அரசும் தமிழ்மக்களின் பக்கம் நீதியின் பக்கம் நின்றதில்லை. மிகச்சிறந்த அரசியல் தெளிவு பெற்ற நேர்மையான இளைய தமிழத்தேசிய அரசியல் கலாச்சாரம் வடகிழக்கில் வரவேண்டும். அப்போது தான் வெள்ளம் வர முன் அணை கட்ட முடியும். தமிழ்மக்களாக அனைவரும் உங்கள் சிந்தனைகளில் ஒன்றிணையுங்கள். நாங்கள் ஒன்றை நம்புகின்றோம் தூய தமிழ் தேசியம் நிச்சயம் வெல்லும் என தெரிவித்துள்ளது.



# யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கருத்தை ஏற்று தமிழ்தேசியகட்சிகள் செயல்படவேண்டும் என்கிறார் பா.அரியநேத்திரன்!

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கருத்தை தமிழ்தேசியகட்சிகள் ஏற்று செயல்படவேண்டும் - பா.அரியநேத்திரன்!

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்த கருத்தை அனைத்து தமிழ்தேசிய கட்சிகளும் கடைப்பிடித்து வடகிழக்கில் ஒற்றுமையாக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்பொதுவேட்பாளராக கடந்த 2024, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், இலங்கை அரசியலில் பிரித்தானியாவில் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதாக கூறப்படும் 1948, தொடக்கம் தற்போது 2025, வரை 76, ஆண்டுகள் ஆட்சிசெய்த பிரதமர்களாக இருக்கலாம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளாக இருக்கலாம் அனைவருமே தமிழ் மக்களின் அபிலாசைகளை புறம்தள்ளி இனவாதிகளாக பௌத்தமதத்துக்கும், சிங்கள பேரினவாதத்துக்கும் துணைபோனவர்களாகவே ஆட்சி செய்கின்றனர்.

அதில் தற்போதைய ஜனாதிபதி அநுராவும் விதிவிலக்கில்லை என்பதையே திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் மீண்டும் நிருபித்துள்ளது.

இரவு 8, மணிக்கு திட்டமிட்டு பௌத்த பிக்குகளால் வைக்கப்பட்ட புத்தர் சிலை அன்று இரவு 11, மணிக்கு அநுர அரசால் பொலிசாரை கொண்டு அகற்றிய சம்பவத்தை தமிழ் மக்கள் ஆரோக்கியமான விடயமாகவும் நிறைவேற்று அதிகாரத்தை சரியாகவே ஜனாதிபதி அநுர கையாண்டுள்ளார் என கூறினர்.

ஆனால் மறுநாள் அந்த புத்தர் சிலையை பாதுகாப்புக்காவே எடுத்ததாகவும் மீண்டும் அதே இடத்தில் வைப்பதாகவும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் கூறியவிடயமும் மீண்டும் அதே பொலிசார் மேள தாளத்துடன் பகல்வேளை அந்த புத்தர் சிலை அதே இடத்தில் வைத்த விடயம் தேசிய மக்கள் சக்தி அரசும் ஏனைய இனவாதிகளுக்கு சோரம் போய்விட்டது என்பது கோடிட்டு காட்டிவிட்டது.

இன்னும் ஒருபடி மேலே சென்று எதிர்கட்சி தலைவர் சஜீத்பிரமதாசா பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது அவருடைய வழமையான இனவாதமும் அவருடைய பேச்சில் தெளிவாக வெளிப்பட்டது.

இது ஒரு பௌத்தநாடு மகாநாயக்கர்கள் மூவருடைய ஆலோசனை பெறாமல் எந்த அடிப்படையில் புத்தர் சிலை அகற்றப்பட்டது அதை அகற்ற உத்தவாதம் இட்டவர் யார்?

என பேசினார் இவர் வீடமைப்பு கலாசார அமைச்சராக கடந்த 2015 இல் நல்லாட்சியில் இருந்தபோதுதான் வடகிழக்கில் 1000, பன்சாலைகள் அமைப்பதாக அவர் கூறி 500, மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது அதே நல்லாட்சியில் எதிர்கட்சியாக இருந்து நல்லாட்சிக்கு ஆதரவு வழங்கிய எமது தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தலைவர் சம்மந்தன் ஐயா உட்பட எந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் அதை எதிர்க்கவில்லை.

அவ்வாறான இனவாத மதவாத சிந்தனை கொண்ட சஜீத்பிரமதாசாவின் வரலாற்றை அறிந்தும் 2024, ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரான என்னை (பா.அரியநேத்திரன்) தோற்கடிக்கவேண்டும் என்பதற்காக தமிழரசுக்கட்சியில் உள்ள சிலருடைய சலுகைகளுக்காக ஒரு பிரிவினர் தனிநபர் கோரிக்கையை ஏற்று வெட்கம் இல்லாம் அவரை ஆதரித்தனர் அவரை ஆதரித்த பலனை திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில் உணர்ந்திருப்பார்கள் தமிழரசுக்கட்சில் சஜீத்தை ஆதரித்த ஒவ்வொரு தமிழனுக்கும் முகத்தில் அவர் கருபூசிவிட்டார் என்பதே உண்மை.

எதிர்வரும் 2026,27 இல் மகாணசபை தேர்தல் கதை எழுந்துள்ளது அதில் வடகிழக்கு தமிழர்கள் ஓரணியில் செயல்பட வேண்டும் என்பதையும், தமிழ்மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்தேசிய கட்சிகள் ஒன்றாக ஒரு குரலில் வரவேண்டும் என்பதை யாழ்ப்பாண மல்கலைகைக்கழக மாணவர்கள் அழுத்தம் திருத்தமாக வேண்டுகோளை முன்வைத்துள்ளனர் இதனை தமிழ்தேசிய கட்சிகள் கவனத்தில் எடுத்து கடைப்பிடிக்க தவறுவாகர்களானால் மாணவர்கள் அணிதிரண்டு நேரடியாக தமிழ்தேசிய கட்சிகளை குறிப்பாக தமிழரசுக்கட்சியையும் மக்களிடம் இருந்து அன்னியப்படுத்தைம் சூழல் ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு யாழ் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின் கருத்தை ஏற்று செயல்பட வேண்டும் என பா.அரியநேத்திரன் மேலும் தெரிவித்தார்.

உங்கள் உடல் வலிகளிலிருந்தும் தசைப் பிடிப்பு காரணமான உபாதைகளிலிருந்தும் தகுந்த சிகிச்சை மூலம் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்...

MiracleHealth

ஸ்காபுறோ நகரில்
3000 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2V1
என்னும் விலாசத்தில் இயங்குகின்றது.
(Scarborough General Hospital அருகில்)




Physiotherapy • Massage Therapy • Counselling • Ayurvedic Therapy • Acupuncture • IV Nutrition Therapy





We are accepting new patients.

தமிழிலும் உரையாடும் வசதிகள் உள்ளன.

Phone:
416.289.4444

உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?



Legalize your basement now!

* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets



Coverall Group Inc.

416-706-8160 OR 416-893-3216

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:


டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca




11/24


POWERED BY
Vijaya Jewellery
1341, Markham Road, Unit 127 Scarborough ON m1x0A5
+1 (437) 833-3197, (647) 329-3062
Email:yugan14@hotmail.com
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
RemitB
Remitbee Online Money Transfer Service
Best exchange rates in Canada
100% online and available on all platforms
Secure, fast and convenient
100,000+ Canadian customers
100+ partners around the globe
Sending to 80+ countries in 50+ different currencies
$5 billion transferred as of 2021
உதயன் பத்திரிகையின் 29வது ஆண்டு விழாவும்
2025 ஆண்டிற்கான பல்சுவைக் கலை விழாவும்
29th Anniversary Celebrations and Uthayan Cultural Festival-2025
Tickets:
VIP $50
Regular $15
சிறப்புப் படைப்பாக
"எரிந்த நம் யாழ் நூலகம்"
DEC 13th, 2025
சனிக்கிழமை மாலை 6.00 மணி
* பயனுள்ள உரைகள்
* இசை
* நடனம்
* நாடகம் மற்றும்
* கவிதா நிகழ்வு ஆகியன
இவ்வருட விழாவின் பிரதம விருந்தினர்
கனடா மொன்றியால் "தமிழாழி"
கலை இலக்கிய அமைப்பின் நிறுவனர்
"மணிவிழா நாயகன்" "பாட்டருவி"
க.உயிரவன் அவர்கள்
ஒன்றாரியோ தமிழிசைக் கலா மன்ற
கலாச்சார மண்டபம்
1120 Tapscott Rd Unit 3,
Scarborough, ON M1X 1E8
K T GROUP
PRESIDENT & CEO
MR. KANA SELVA
647302 1189
VIBRANT HOSPITALITY GROUP
ONE OF CANADA'S FASTEST GROWING HOSPITALITY AND DEVELOPMENT GROUPS
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
கனகாம்பிகை
தங்க நகை கடன்
தொடர்புக்கு
416-754-7198
Latika Gold House
35 Karachi Dr Unit 37, Markham ON L3S 0B5
Ph: 647-996-5922 | 905-201-6000
www.latikagoldhouse.ca
AMMA PAWN BROKER
அம்மா நகை அடைவு மையம்
CASH FOR GOLD
416-757-0034
416-994-3861
வீடு வாங்க விற்க
Excel Realty Ltd., Brokerage
Raj Nadarajah
Sales Representative
Dir: 416.333.6115
Residential & Commercial Real Estate Services
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX
நியூ ரங்கனாஸ்
STANDARD MORTGAGES INC.
Raj Subrayam
CTS BUILDING SUPPLIES LTD
"providing the highest customer service"
416 840 4538
www.ctsbuildingsupplies.com
733 Progress Ave, Scarborough, On. M1H 2W7
Fashion WORLD INC
Exclusive Clothing Collection
7393 Markham rd, Unit 82,
Markham, On. L3S 0B5
905 471 2223
www.thefashionworld.com
ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
N.K.S DRAPERY & BLINDS FABRIC
More than 25 years Experience
KETHA
416-321-6420
Sri Vallipuranathar
INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal - Corporation - New Home HST Filling
Selva Vettyvel
416 568 4301
905 471 4050
204-7 Eastvale Dr, Markham ON, L3S 4N8
Chapel Ridge
COMPUTEK COLLEGE
Muraly Srinarayanathas
Chief Stratey Officer
2425 Eglinton Ave East Suite 400
Toronto, ON M1K 5G8
Tel: 416-321-9911 ext. 320
Fax: 416-775-9323
Markham Campus
7 Eastvale Dr, Suite 202
Markham, ON L3S 4N8
Tel: 905-471-3344
muraly@computek.edu / www.computek.edu
OATC
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services For Personal & Small Business
Corporate Tax & Income Tax Returns
MiracleHealth
MAHAANS
PICK & PRESS OIL MILL
ORGANIC BULK STORE
வீடு வாங்க விற்க
Baskaran Sinnadurai
Broker
RE/MAX ACE
416 880 8585
1286 Kennedy Rd,Unit 3
Toronto, ON, MIP 2L5
RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
Rajeev Koneswaran
Owner & Broker
416 568 1078
SANTHA
PLUMBING & DRAINAGE SERVICES
FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha
Tel: 416-200-5470
info@santha.ca
www.santha.ca
FRUITS HABY
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519
For Tickets and information: 416-732-1608 or 416-752-1524


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198


CANADIAN TAMIL ARTISTS' ASSOCIATION
yugam radio yugam TV
கலைச் செம்மல் தமிழ் திரு. க–மதிபாஸ்கரன் அரங்கு
மதங்க சூளாமணி
கணபதி ரவீந்திரன்
கனடியத் தமிழ் கலைஞர்கள் சங்கம், யுகம் வானொலி, யுகம் தொலைக்காட்சி இணைந்து பெருமையுடன் வழங்கும்
நவரசத் தாரகை
ரூபி யோகதாசன்
21ஆவது ஆண்டு
நாடகப் பெருவிழா
சிரிக்க, சிந்திக்க, சிந்தனைக்கு விருந்தளிக்க
ஒரே மேடையில் ஐந்து நாடகங்கள் மற்றும்
பலசுவை நிகழ்ச்சிகள் உங்களை மகிழ்விக்கும்
SATURDAY
DEC
06
@4:30PM
TICKET $20
ARMENIAN YOUTH CENTRE
50 HALLCROWN PLACE (VICTORIA PARK & 401) TORONTO, ON, M2J 1P6
LOCATION QR
RAVI : 416 898 7284 RUBY : 416 670 6522
TORONTO GAANA BAND
SATHEES (416) 846-1718
SENTHURAN (416) 993-6386
இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெறும்
TITLE SPONSOR
Vijaya Jewellery
MEDIA SPONSOR
416-752-1524
GTA தமிழ்
647-278-5881 416-678-5865
TORONTO TAMIL
416-429-2822
416-561-3302
416.824.1212
438-771-8463
Tamil Mirror
Krishna
416.414.5562
நாடகக் கலையை வாழவைக்கும் அனுசரணையாளர்கள்
MAIN SPONSOR
SPECTRONX TECHNOLOGIES
CEDARBRAE MALL
CEDARCARE MEDICAL CENTRE
Tel: 416-289-9786
IT'S TIME FOR OUR OWN TAMIL COMMUNITY CENTRE!
SANTHA PANCHALINGAM
Entrepreneur | Philanthropist | Investor | Community Builder
416.200.5470 | info@santha.ca
AJAX CREMATORIUM
MELWYN STANISLAUS DHARMA
647-713-6049
HI FI BARBERSHOP
PAWNBANK INC.
EASY CASH FOR GOLD
INTEREST
416-754-7198
info@sugshe.com
www.pawnbank.ca
(FINCH & MCCOWAN) 1571, Sandhurst Circle #159D, Scarborough - M1V1V2.
SPONSOR
VIBRANT HOSPITALITY GROUP
GreatLIFE
Jay Nadarajah CLU, CHS
Financial Advisor
MORTGAGE FINANCIAL
NESAN
CityCan
JRB GROUP
R.R.Rajkumar
647-289-5164
Dr. Sabesan Thangathurai
Tel: 416-665-7770
AMMA PAWN BROKER
CASH FOR GOLD
DEVADAS LAW
Joni & Paul
Celebrate!
The Pongal Villa 2024
Easan Krishna-Pillai
N.K.S
DRAPERY & BLINDS FABRIC
KETHA: 416.321.6420
THE SECURITY FORCE
Cell Tel Mobility
VASHA ORGANIC PRODUCTS
RKS PRINTERS
PRINTING PARTNER

# தமிழ் இனத்தின் விடிவுக்காய் தமதுயிரை அளி(ழி)த்தவர்கள்



**"மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திரச்சிற்பிகள் எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீர மறவர்கள் எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈர்ந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்."**

**------------------------------------------- கே.பாலா -**

தமிழினத்தின் இறையாண்மை வேர்களாக தமிழீழ மண்ணைப் பற்றியிருக்கும் மாவீரர்களைப் போற்றும் மாவீரர் நாள் பற்றி கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய உயிர்ப்பான வரிகள் "மாவீரச் செல்வங்கள் மண்கிழித்து வெளிவந்து சாவீரச் செய்தி சாற்றி உறவுரைத்து பேசும் நாள்". என்பதாகும் இவர்கள்தான் தமிழினம் போற்றி வணங்கும், சிங்களத்தேசம் அஞ்சி நடுங்கும், சர்வதேசம் விழியுர்த்திப் பார்க்கும் எங்கள் மாவீரர்கள். மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் உயிர்க்கொடை தந்த இந்த புனிதர்களுக்கு மக்கள் ஒன்றுகூடி வணக்கம் செய்யும் மாவீரர் நாள் நவம்பர் 21 ஆம் திகதி முதல் நவம்பர் 27ஆம் திகதி வரை தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

உலகத் தமிழர் வரலாற்றில் தமிழர்களுக்கென விடுதலை நோக்கிய பயணத்தை மேற்கொள்வதற்காக தனித்தமிழர் மரபு வழி இராணுவத்தை தரை, கடல் என கடந்து வான் படையை நிறுவி பற்றுறுதியோடு தமிழர் நாமென்ற தலை நிமிர்வுடன் தமிழ்த் தேசியம், தமிழர் தாயகம், தமிழீழ மக்களின் அடையாளமாகவும், தமிழர்களைத் தனிப் பெரும் சக்தியாக உலகிற்கு அடையாளப்படுத்திய அமைப்பாகவும் விளங்கிய தமிழீழ விடுதலைப்புலிகள் தாங்கள் கொண்ட கொள்கையில் இறுக்கமான பற்றுறுதி கொண்டவர்களாய் தமிழீழ தேசத்தையும் அதன் விடுதலையையும் அதிகம் நேசித்தவர்கள். தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு செயல் உருவம் கொடுத்தவர்கள், தமிழ்த் தேசிய இனத்தின் இறையாண்மையை பிரயோகிக்கவும் களமாடி, தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திர வேள்விக்கு தம் உயிர்களை வித்தாகி விருட்சமாய் மிளிர்பவர்கள் மாவீரர்கள்.

"எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால்எழுதப் பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புகள் அர்த்தமற்ற இழப்புகள் அல்ல, இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக, எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமதுபோராளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்குசக்தியாக அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திரச்சிற்பிகள் எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீர மறவர்கள் எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈர்ந்துள்ள இந்தமகத்தான தற்கொடையாளர்கள் (தியாகிகள்) காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒருசாதாரண மனிதப் பிறவி அல்ல அவன் ஓர் இலட்சியவாதி ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன் தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காகவாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக, விமோசனத்திற்காக வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்கை உன்னதமானது. அர்த்தமுள்ளசுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே, விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப்பிறவிகள், அசாதாரணமான பிறவிகள்" என்றார் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்.

1989 ஆம் ஆண்டு தொடக்கம் "மாவீரர் நாள்" எனும் பெயருடன் தமிழ் மக்களின் விடுதலைக்காக தங்களது உயிர்த் தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூரும் நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில் முல்லைத்தீவு மணலாற்றுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அன்று தொடக்கம் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 21 ஆம் திகதி மாவீரர் நாள் ஆரம்பமாகி நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது. அன்றைய தினமே சர்வதேசமே எதிர்பார்த்திருக்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உரை இடம்பெறுகின்ற நாளாகவும் இருந்தது.

மாவீரர் நாளாக நவம்பர் 27 விடுதலைப் புலிகளால் 1989 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. வீரப் பரம்பரையைத் தொடங்கிய முன்னோடியாக 1982ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி தமிழீழ விடுதலைப்போராட்டப் பயணத்தில் முதல் வித்தாகி வீரச் சாவடைந்த லெப்ரினனட் சங்கர் நினைவாக நவம்பர் 27 அன்றைய நாள் மாவீரர் நாளாகக் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனினால் 1989 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. 2008 ஆம் ஆண்டு நடந்த மாவீரர் தினமே தமிழீழ விடுதலைப் புலிகளால் பெரும் எடுப்பில் அனுஷ்டிக்கப்பட்ட இறுதி மாவீரர் தினமாகவும் அமைந்தது.

1207 போராளிகள் வீரச்சாவு கண்டிருந்த காலத்தில், 1989 ஆண்டில் முதலாவது மாவீரர் நாளின் போது விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆற்றிய உரையில் "இதுவரை காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யாரென்று கேட்கும் நிலையிருந்தது. இன்று எம்மினத்தின் வீரர்களை நினைவுகூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். இனி எமது இனம் நிச்சயமாக அழியாது. அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம்தான் எங்களுக்கு இன்று உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான நிகழ்வாகக் கருதி ஒவ்வொரு வருடமும் கொண்டாடவுள்ளோம்" என்று அன்று பிரகடனம் செய்திருந்தார்.




1982-11-27 ஆம் திகதி முதல் 27-11-2008 வரை 22390 போராளிகள் மாவீரர்களாகியுள்ளனர். இவர்களின் முதல் ஆண் மாவீரராக 1982-11-27ஆம் திகதி முதல்வித்தாகி வீரச் சாவடைந்த லெப் சங்கரும் (செல்வச்சந்திரன் சத்தியநாதன் கம்பர்மலை, வடமராட்சி, யாழ்ப்பாணம்) முதல் பெண் மாவீரராக 10.10.1987 ஆம் ஆண்டு கோப்பாயில் இந்திய இராணுவத்துடன் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவடைந்த 2ஆம் லெப்டினன்ட் மாலதியும் (சகாயசீலி பேதுறு - ஆட்காட்டிவெளி, மன்னார்) உள்ளனர்.

தொடக்க காலங்களில் மாவீரர் நாளில் ஈகைச்சுடரேற்றுவது நள்ளிரவு 12 மணிக்கு என்றிருந்தது. 1994ஆம் ஆண்டு முதல், மாவீரர் நாள் நள்ளிரவில் இருந்து, மாலை 6.05 மணிக்கு மாற்றப்பட்டது. முதல் மாவீரன் லெப். சங்கர் வீரச்சாவடைந்த நேரமும் அதுவாகும். இதற்கு முன் தலைவரின் மாவீரர் நாள் உரை அமையும். மாவீரர் உரை முடிந்ததும் 6.05 மணிக்கு தமிழீழம் எங்கணும் அனைத்துத் தேவாலய மணிகளும் ஒரு நிமிடம் மணியெழுப்பும். அதன் பின் அகவணக்கம் செலுத்தப்படும். மாவீரர் துயிலும் இல்லங்கள் யாவற்றிலும் ஒவ்வொரு கல்லறைக்கும் நடுகல்லுக்கும் முன்னால் பெற்றோர் உரித்தாளர்கள் போன்றோரால் சுடர் ஏற்றப்படும். துயிலும் இல்லத்தின் நடுமேடையிலும் பிரதான ஈகைச்சுடர் ஏற்றப்படும்.

முதலாவது மாவீரர் துயிலும் இல்லம், கோப்பாயில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் கோப்பாய் துயிலுமில்ல மண்ணில், போராளிகளின் வித்துடல்கள் விதைக்கப் பட்டதோடு, எரிக்கப்பட்டும் வந்தன. 1991இல் வித்துடல்கள் எரிக்கப்படமாட்டாது, விதைக்கப்படும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. இம்முடிவானது, போராளிகளுள் மிகப் பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப்பட்டது. வித்துடல்கள் புதைக்கப்படும் என்ற முடிவு எடுக்கப்பட்டபின், முதன்முதலான கப்டன் சோலையின் வித்துடல் கோப்பாய் துயிலும் இல்லத்தில், 1991 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14ஆம் திகதி விதைக்கப்பட்டது. ஆரம்பத்தில் பிராந்தியங்களுக்கு ஒரு துயிலும் இல்லமாக இருந்து பின்னர் மாவட்டங்களுக்கு ஒன்று என விரிவாக்கபட்டது. பின்னர் மேலும் பல மாவீரர் துயிலும் இல்லங்கள் பிரதேச ரீதியாக அமைக்கப்பட்டது. வித்துடல் கிடைக்காமல் போனால், நினைவுக்கற்கள் நாட்டும் வழமை, உண்டு. அதே சமயத்தில் வித்துடல் ஒரு துயிலும் இல்லத்திலும், அவருக்கான நினைவுக்கல் இன்னுமோர் துயிலும் இல்லத்திலும், வைப்பது இன்னுமொரு வழமையாகும்.

தமிழீழத்திற்கான உரிமைப்போரில் வீரச் சாவடையும் மாவீர்களுக்காக கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லம், மட்டக்களப்பு மாவட்டத்தில் தரவை மாவீரர் துயிலுமில்லம், தாண்டியடி மாவீரர் துயிலுமில்லம், கண்டலடி மாவீரர் துயிலுமில்லம், மாவடி முன்மாரி மாவீரர் துயிலுமில்லம், திருகோணமலை மாவட்டத்தில் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம், தியாகவனம் மாவீரர் துயிலுமில்லம், பெரியகுளம் மாவீரர் துயிலுமில்லம், உப்பாறு மாவீரர் துயிலுமில்லம், வடக்கு கணத்தில் மணலாறு மாவட்டத்தில் ஜீவன்முகாம் / உதயபீடம் மாவீரர் துயிலுமில்லம், கோடாலிக்கல்/புனிதபூமி மாவீரர் துயிலுமில்லம், வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லம், மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலுமில்லம், பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லம், முள்ளிக்குளம் மாவீரர் துயிலுமில்லம், முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம், விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்லம், அளம்பில் மாவீரர் துயிலுமில்லம், ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம், வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம், கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம், முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம், யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், சாட்டி மாவீரர் துயிலுமில்லம், எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம், உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் என்பன அமைக்கப்பட்டிருந்தன.

போராட்டக் காலத்தில் மாவீரர் நாளில் பல மாவீரர் குடும்பங்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு சென்று அஞ்சலி செலுத்துவர். கொடியேற்றுதல், ஈகைச்சுடரேற்றுதல், மலர்தூவி அஞ்சலி செய்தல் என்பன மாவீரர்நாளின் முக்கிய நிகழ்வுகளாக இடம்பெற்றன அதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர்நாள் உரையும், விடுதலை வேட்கையையும், வீர உணர்வுகளையும் தரக்கூடியதான கலைநிகழ்வுகளும், பல்வேறு நினைவுகூர் நிகழ்வுகள், உரைகளும் இடம்பெற்றன. மாவீரர் வாரத்தில் மாவீரர் குடும்பங்களின் உறுப்பினர்களும் கௌரவிக்கப்பட்டனர்.



(தொடர்ச்சி 17 பக்கம்)

# யாழ்ப்பாணம் – பருத்தித்துறை கொட்டடி மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு!



யாழ்ப்பாணம் - பருத்தித்துறை கொட்டடி மீனவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கான முத்தரப்பு சந்திப்பு ஒன்று இன்று காலை 10:00 மணியளவில் இடம்பெற்றது.

பருத்தித்துறை நகர சபைத்தலைவர் வின்சன் டி போல் டக்ளஸ் போல் தலைமையில், பருத்தித்துறை நகரசபை மண்டபத்தில் கரையோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள், பருத்தித்துறை நகரசபை, உப தவிசாளர், கொட்டடி மீனவர் சங்க பிரதிநிதிகள் ஆகியோரிடையே இந்த கூட்டம் இடம்பெற்றது.

கூட்டத்தில், கொட்டடி மீனவர்கள் மற்றும் கரையோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் தீர்மானிக்கின்ற இடத்தில் மீன்பிடி துறை அகழும்போது குவிக்கப்பட்ட மணல்மண்ணை கொட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

பருத்தித்துறை நகரசபையில் இடம்பெற்ற முத்தரப்பு உரையாடலை அடுத்து பருத்தித்துறை கொட்டடியில் துறை அகழ்ந்த இடத்தை பார்வையிட்ட கரையோர பாதுகாப்பு அதிகாரிகள், பருத்தித்துறை நகர சபை அதிகாரிகள், கடற்றொழில் அமைச்சின் தனிப்பட்ட செயலாளர் ஆகியோர் குறித்த துறையை அகழ்ந்து மண்ண கொட்டுவதற்குரிய இடத்தினை அடையாளப்படுத்தினர்.

அகழப்பட்ட மண் அகற்றப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 17ம் திகதி திங்கட்கிழமை கொட்டடி மீனவர்கள் பருத்தித்துறை நகரசபைக்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடதக்கது.

# கடன்சுமை காரணமாக யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவர் உயிர்மாய்த்துக்கொண்ட துயரம்!

கடன்சுமை காரணமாக யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து நவம்பர் 18ம் திகதி அன்றையதினம் உயிர்மாய்த்துள்ளார். அளவெட்டி பகுதியைச் சேர்ந்த ஆ.கஜிந்தன் (வயது 28) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞன் பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள தந்தையின் வர்த்தக நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார். அந்தவகையில் அன்று காலை அந்த வர்த்தக ஸ்தாபனத்தின் களஞ்சியசாலையில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். கடன்சுமை காரணமாக குறித்த இளைஞன் உயிர்மாய்த்ததாக மரண விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



# வடக்கு கிழக்கு மீனவ இணைப்பானது காலத்தின் தேவை என்கிறார் மன்னார் சமூக அபிவிருத்திக்கான மைய முகாமையாளர் ஜாட்சன் பிரிடாரோஜாட்சன்!

வடக்கு கிழக்கு மீனவ இணைப்பு காலத்தின் தேவை என ஜாட்சன் தெரிவித்துள்ளார்.!

வடக்கு-கிழக்கு இளம் மீனவர்கள் இணைப்பின் மூலம் பல விடயங்களை சாதிக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.


21ம் திகதி அன்று வியாழக்கிழமை சர்வதேச மீனவ தினத்தை முன்னிட்டு நயினாதீவில் இடம்பெற்ற வடக்கு கிழக்கு மீனவர்கள் கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தின் பின்னரான காலத்திலும் வடக்கு கிழக்கு மீனவ சமூகம் பல்வேறு பிரச்சனைகளை எதிர் கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக வடக்கு கிழக்கு கடல் வளங்கள் உள்ளூர் மீனவர்களாலும் வெளிநாட்டு மீனவர்களாலும் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வரும்நிலையில் மீனவ சமூகத்தின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி வருகிறது.

மீனவ சமுதாயத்தை கடற்தொழில் இருந்து ஓரங்கட்டுவதற்கு பல்வேறு வழிகளில் அடக்குமுறைகள் பிரியோகிக்கப்படு வரும் நிலையில் நாங்கள் அதனை ஒற்றுமையுடன் எதிர்கொள்ள வேண்டும்.



ஆகவே எமது கடல் வளத்தை பாதுகாப்பதற்கு வடக்கு கிழக்கு இளம் மீனவர்கள் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டியது காலம் காலத்தின் கட்டாயம் என அவர் மேலும் தெரிவித்தார்.





# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1173



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில்

### உடுப்பிட்டி

நியாய தர்மங்களை நிலைநாட்டி தீயவற்றைச் சங்காரம் செய்த, சக்தி கொண்ட பல்வேறு தோற்றங்கள் பற்றிய கதைகளைப் புராணங்கள் கூறியுள்ளன. இவற்றுள் தக்கனின் மகளாக அவதரித்து, உயிர்களைக் காத்தருளிய தாட்சாயணியின் தோற்றம் சிறப்பானது. தாட்சாயணியின் தோற்றத்சிறப்பினைப் புராண வரலாறுகளின் மூலம் அறியலாம். ஒரு சந்தர்ப்பத்திலே தாட்சாயணியின் தந்தையாகிய தக்கன் என்பவன், யாகம் ஒன்றை நிகழ்த்தினான். தீயோர் வசப்பட்ட தக்கன், சங்காரனாகிய சிவனுக்கு அவி பாகத்தைக் கொடாது அவமதிக்கும் முக்கிய நோக்குடனேயே, இந்த யாகத்தை நிகழ்த்தினான். சிவனைத் தவிர ஏனைய தேவர்களை அழைத்து யாகம் நிகழ்த்தப்பட்டது. தந்தையாரால் நிகழ்த்தப்படும் யாகத்தைக் காண விரும்பிய தாட்சாயணிதேவி, சிவன் தடுத்ததையும் பொருட்படுத்தாது யாகம் நடைபெற்ற இடத்திற்குச் சென்றார். தந்தையாகிய தக்கன் சிவனை நிந்தித்ததை நேரிலே கண்டு, அதனைத் தடுத்துத் தந்தையைக் காப்பாற்ற முயன்றும், பலனளிக்கவில்லை. மகளை அவமதித்துத் துரத்திய தக்கன், யாகத்தைத் தொடர்ந்து நடத்தினான். விருப்பு வெறுப்புக்களற்ற இறைவன், ஆணவம் தலைவிரித்தாடும் தக்கனின் யாகத்தைச் சங்காரம் செய்து, அவனைக் காப்பாற்றக் கருணை கொண்டார். இவ்வேளையில், தகாது செய்யும் தக்கனின் மகள் என்ற வடு, தனக்கு ஏற்படாதிருக்கும்பொருட்டு, யோகாக்கினியால் தன்னுடல் நீத்து, தாட்சாயணி என்னும் நிலையினின்றும் நீங்கி, பர்வதராசனின் புதல்வியாக அவதரித்து, பார்வதி என்னும் நாமத்தினை இறைவி பெற்றார்.

இறைவியின் இந்நிலைபற்றி அறிந்த இறைவன், கோபங்கொண்டு தக்கனைச் சங்காரம் செய்யத் திருவுளம் கொண்டார். சங்காரமூர்த்தமான உருத்திர மூர்த்தியினது சொரூபமாய், சிவபிரானது நெற்றிக் கண்ணினின்றும் வீரபத்திரமூர்த்தி தோன்றினார். இவ்வேளையில், உமாதேவியாரது கோபாக்கினியினின்றும், பத்திரகாளி தோற்றம் பெற்றார். வீரபத்திரர், பத்திரகாளி என்ற இரு பெயர்களிலும் காணப்படும் பத்திரம் என்ற சொல், நன்மை என்று பொருள்படும். சிவசக்தி அம்சமாகத் தோற்றம் பெற்ற வீரபத்திர மூர்த்தியையும், பத்திரகாளியையும் தோற்றம் பெறச் செய்து, ஆணவமயப்பட்ட தக்கனின் யாகசங்காரம் நடைபெற்றது. யாகசங்காரத்தின் பின் தக்கனும், ஏனையோரும் தமது தவறை உணரும் நிலையை ஏற்படுத்தி அருள் புரிந்து காப்பாற்றப்பட்டனர். பரம்பொருளான இறைவனை உள்ளத்திருத்தாது, யாகங்கள் செய்வதன் மூலம் நன்மைகள் ஏற்படாது துன்பமே எஞ்சும் என்பதையே மேலே கூறப்பட்ட புராணக்கதை விளக்கியுள்ளது.

## (வரலாறும் மரபும்)

வீரபத்திர மூர்த்தியை வீரபத்ர எனவும் வழங்குவர். இச்சொல்லிலுள்ள வீர என்பது வீரத்தையும், பத்ர என்பது நன்மையையும் குறிக்கின்றது. எனவே வீரபத்திரமூர்த்தியானவர் வீரத்தினையும், நன்மையையும் பக்தர்களுக்கு நல்கும் அருள்கொண்டவர். வீரபத்திரர் தோன்றும்பொழுது பாதாரவிந்தங்களிலே தண்டை வீரகண்டையுடன் தோன்றியமையால், அவருக்கு வீரபத்திரர் என்ற பெயர் ஏற்பட்டதாகப் பிரபஞ்ச உற்பத்தி என்னும் நூலிலே குறிப்பிடப்பட்டுள்ளது. வீரபத்திரக் கோலத்தில் புரிந்த அருட்செயல்களை அடிப்படையாகக் கொண்டு வீரபத்திரரை உக்கிரன், அழற்கண்வந்தோன், உமைமகன், முக்கண்ணன், சடையோன், வில்லி, குரோதன் எனப் பல நாமங்களால் அழைக்கும் வழக்கம் காணப்படுகின்றது.

வீரபத்திர மூர்த்திக்கு வேதாகமவழியிலும், வேதாகமத்திற்குப் புறம்பான வழியிலும் வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன. வேதாகம முறையைப் பின்பற்றும் ஆலயங்களில் மகோற்சவங்கள் சிறப்பாக நடைபெறும். மகோற்சவ விழா இடம்பெறாத ஆலயங்களில் அலங்கார உற்சவங்களும், பொங்கல், திருக்குளிர்ச்சி போன்ற வழிபாடுகளும் இடம்பெறும். ஆகமமரபில் வீரபத்திரமூர்த்தியை வழிபடும்போது, அவருக்குரிய தியான மந்திரத்தைக் கூறுவது மரபாகக் காணப்படுகின்றது.

வீரபத்திரரது வழிபாட்டிலே தைப்பூசம், சிவராத்திரி, சித்திரைப்பரணி, தை அமாவாசை, ஐப்பசிப்பரணி, என்பவற்றோடு மங்கலவாரம் எனப்படும் செவ்வாய்க்கிழமையும் சிறந்த விரத நாட்களாகக் கருதப்படுகின்றன. அறுசுவை அன்ன வகைகளும், பணிகார வகைகளும் இவருக்கு ஏற்புடையது. விரததினங்களிலே பொங்கல் உகந்தது. பொங்கல் சாதத்தோடு பணிகாரங்களையும், பழவகைகளையும் படைத்து மடை என்ற ரீதியில் வழிபடுவது மேன்மையானது. நோய் துன்பமுற்றோர் விபூதியினால் அபிஷேகம் செய்து அவ்விபூதியைப் பெற்று அணிவதனால் துன்பங்கள் நீங்கிச் சுகம் பெறுவர் எனப் பெரியோர் உரைத்துள்ளனர்.

இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட வீரபத்திரசுவாமி வழிபாடு ஈழத்தில் பல்வேறிடங்களிலே காணப்படுகின்றது. வடமராட்சிப் பிரதேசத்தில் உடுப்பிட்டியிலுள்ள சந்திரசேகர வீரபத்திரசுவாமிகோயில் வரலாற்றுச் சிறப்புடையது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முச்சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டது. இக்கோயிலின் வரலாறு தமிழகத் தொடர்புடையதாகக் காணபடுகின்றது. தென்னிந்தியாவிலே காஞ்சிமாநகர் பல்வேறு சிறப்புக்களையும் கொண்டது. இங்குள்ள பண்டாரத்தோட்டம் என்னும் கிராமத்திலே வீரபத்திரரைக் குலதெய்வமாகக் கொண்ட சேதுகாவல சேனாதிராச மாப்பாணமுதலியார் வம்சத்திலே, சந்திரசேகர மாப்பாணமுதலியார் என்பவர் தீராத நோயால் பீடிக்கப்பட்டுத் துன்பமுற்றார். குளக்கோட்டு மகாராசாவின் பரம்பரையைச் சேர்ந்த இளவரசன் ஒருவன் இவரது நண்பராயிருந்தார். இந்த நண்பர் ஈழத்தின் வடபாலுள்ள கீரிமலைப் புனிததீர்த்தத்தைப்பறியும், இத்தீர்த்தத்திலே நீராடிக் குன்மநோய் நீங்கப் பெற்றோர் வரலாறுகளையும், தனது நண்பராகிய சந்திரசேகர மாப்பாண முதலியாருக்கு கூறி, கீரிமலைக்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

*வளரும்..*

---

*(15 பக்கம் தொடர்ச்சி)*

## *தமிழ் இனத்தின் விடிவுக்காய் தமதுயிரை அளி(ழி)த்தவர்கள்*

*புலம்பெயர் நாடுகளிலும் தமிழர்தேசத்தில் கடைப்பிடிக்கப்படும் அத்தனை முறைகளும் மாவீரர்நாளில் கடைப்பிடிக்கப்படுகின்றன. மாவீரர் துயிலும் இல்லமும், கல்லறைகளும் செயற்கை முறைகளில் வடிவமைக்கப்பட்டு அதற்கென ஒரு மண்டபத்தில் வைத்து மாவீரர்கள் நினைவுகூரப்படுகிறார்கள். முன்னர் புலம்பெயர் நாடுகளில் நடைபெறும் மாவீரர் நாள் அந்தந்த நாடுகளின் விடுமுறைகளோடு ஒட்டி, ஈழமக்களின் வசதிக்கேற்றபடி நாள் குறிக்கப்பட்டு நினைவுகூரப்பட்டது. தற்போது அந்த நிலையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு மாவீரர் நாளான நவம்பர் 27ஆம் தைக்கதையே அனேகமான புலம்பெயர் நாடுகளில் மாவீரர்நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது.*

*தமிழர்தேச, புலம்பெயர் தமிழர் அனைவரும் மாவீரர் நாளன்று தமிழ் மக்களைக் காக்க இன்னுயிர் நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும்,*

*"மொழியாகி,*
*எங்கள் மூச்சாகி - நாளை*
*முடிசூடும் தமிழ்மீது உறுதி!*
*வழிகாட்டி எம்மை*
*உருவாக்கும் தலைவன்*
*வரலாறு மீதிலும் உறுதி!*
*விழிமூடி இங்கு*
*துயில்கின்ற வேங்கை*
*வீரர்கள் மீதிலும் உறுதி!*
*இழிவாக வாழோம்*
*தமிழீழப் போரில்*
*இனிமேலும் ஓயோம் உறுதி!"*

*என்று கூறி உறுதிமொழியை எடுப்பார்கள்.மாவீரர் நாளின் போது அந்த நாளுக்கென்று பாடப்பட்ட இந்த மாவீரர் பாடல் முதலாவதாக 1991ஆம் ஆண்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஒலித்தது. இதை எழுதியவர் கவிஞர் புதுவை இரத்தினதுரை.*

*விடுதலைப் புலிகளினால் அனுஷ்டிக்கப்பட்ட இறுதி மாவீரர் நாள் 2008ஆம் ஆண்டு ஆகும். அப்போதிருந்த மாவீரர் துயிலும் இல்லங்களின் எண்ணிக்கை - 27. மாவீரரின் கல்லறை மற்றும் நினைவுக்கல் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை அந்த வருடத்தின் அக்டோபர் 31ஆம் திகதி வரை 22,114 மாவீரர்கள் வீரச்சாவு அடைந்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் மாவீரர் பணிமனை அறிவித்திருந்தது. இவர்களில் 17,305 ஆண் மாவீரர்களும் 4,809 பெண் மாவீரர்களும் உள்ளடங்குகின்றனர். கரும்புலிகள் 372. இவர்களில் தரைக் கரும்புலிகள் 113 மற்றும் கடற்கரும்புலிகள் 259 உள்ளடங்குகின்றனர். எல்லைப்படை மாவீரர்கள் - 281 இதில் பெண்கள் - 5, ஆண்கள் - 276. காவற்துறை மாவீரர்கள் - 50 இதில் பெண்கள் - 3, ஆண்கள் - 47 ஆகும். மாமனிதர்கள் - 19 மற்றும் நாட்டுப்பற்றாளர்கள் - 480 இதில் பெண்கள் - 28, ஆண்கள் - 452 31-10-2008 முதல் 27-11-2008 வரை 276 மாவீரர்கள் உள்ளடங்களாக 2008 மாவீரர் எழுச்சி நாள் வரையில் 22390 மாவீரர்கள் எனப் பதிவுகள் குறிப்பிடுகின்றன. இன்னொரு பதிவு 1982 முதல் 18.05.2009 காலை வரை களமாடி வீரச்சாவடைந்த மாவீரர்களின் எண்ணிக்கை 27,000 என்கின்றது.*

*விடுதலைப்புலிகளினால் 2008 ஆம் ஆண்டு இறுதியாக அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் நாளில் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆற்றிய உரையில் "எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் நாம் தமிழரின் சுதந்திர விடிவுக்காக தொடர்ந்து போராடுவோம். வரலாறு விட்ட வழியில் காலம் இட்ட கட்டளைப்படி சிங்கள அந்நிய ஆக்கிரமிப்பு அகலும்வரை தொடர்ந்து போராடுவோம். தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வாழ்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களை பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன்" என்றார்.*

*எனவே "எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் நாம் தமிழரின் சுதந்திர விடிவுக்காக தொடர்ந்து போராடுவோம்" என்ற உறுதியுரையை தன்மானத் தமிழர்களாக எடுப்போம். தமிழர்களாய் ஒன்றிணைவோம், தலைவர் வழி நடப்போம். தமிழ் தேசம் பாதுகாப்போம்.*

### வீணாவின் கவிக்கணை

வாழும் காலம்
எத்தனை என்று
எவரும் அறியர்,
வாழ்ந்தோம் மடிந்தோம்
என்றல்லாமல்
நம் சந்ததிக்கு,
நாம் ஒரு நல்ல
எடுத்துக்காட்டாய்
வாழ்ந்து மறைய வேண்டும்.

# வெளிநாட்டு பெண்ணிடம் தகாத முறையில் நடக்க முற்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவருக்கு 28 வரை விளக்கமறியல்

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்



திருக்கோவில் பிரதேசத்தில் சுற்றுலா வந்து நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவரின் முன் தகாத முறையில் தனது அந்தரங்க உறுப்பை காட்டி பாலியல் தொந்தரவில் ஈடுபட முயன்ற சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட பொகவந்தலாவ பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் பொத்துவில் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எதிர்வரும் 28ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு 17ம் திகதி அன்று திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

பொத்துவில் அறுகம்பை பிரதேசத்துக்கு அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான வீதி ஊடாக வீதியால் முச்சக்கர வண்டி ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த சுற்றுலா பிரயாணியான நெதர்லாந்து பெண் ஒருவரை கடந்த மாதம் 26ம் திகதி திருக்கோவில் பிரதேசத்தில் வைத்து மோட்டார் சைக்கிளில் சென்ற ஆண் ஒருவர் இடைமறித்து அவருக்கு தனது அந்தரங்க உறுப்பை காட்டி பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார்.

இது தொடர்பாக குறித்த பெண் அறுகம்பே சுற்றுலா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை செய்ததையடுத்து குறித்த நபரின் புகைப்படத்தை ஊடகங்கள் ஊடாக பொலிசார் வெளியிட்டு அவர் தொடர்பாக தகவல் வழங்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து குறித்த நபர் தொடர்பாக கடந்த 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை விசாரணையை மேற்கொண்ட திருக்கோவில் பொலிசார் 25 வயதுடையவரும் ஒரு பிள்ளையின் தந்தையும் பொகலந்தலாவையைச் சேர்ந்தவரும் களுவாஞ்சிக்குடி எருவில் பிரதேசத்தில் திருமணம் முடித்து கடந்த சில வருடமாக திருக்கோவில் பிரதேசத்தில் வாடகை வீடு ஒன்றில் குடும்பத்துடன் வாழ்ந்து வருபவருமான அவர் பற்றிய விபரங்களை பொலிசார் ஆரம்பக்கட்ட விசாரணையில் சேகரிக்கப்பட்டன.

இதனையடுத்து அவர் வாடகைக்கு இருந்த வீட்டை முற்றுகையிட்ட போது அவர் வீட்டை பூட்டி விட்டு குடும்பத்துடன் கடந்த 3 தினங்களுக்கு முன்னர் வெளியேறி களுவாஞ்சிக்குடி பிரதேசத்திற்கு சென்றுள்ளதாக கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்றபோது அவர் அங்கும் இல்லாது தலைமறைவாகியுள்ள நிலையில் மருதமுனை பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலைத்துக்கு அருகில் தனது தலையை மொட்டையடித்து தனது தோற்றத்தை மாற்றிக் கொண்ட நிலையில் இருந்தபோது அங்கு வைத்து குறித்த நபரை கைது செய்து பொத்துவில் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

இவ்வாறு செய்யப்பட்டவரை 17ம் திகதி அன்று திங்கட்கிழமை பொத்துவில் நீதவான் நீதிமன்றத்தில் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் 28 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார்.

# யாழ்ப்பாண. மாவட்டத்தில் நெல்லில் இலை மடிச்சுக்கட்டி நோய் தாக்கம்

## போதனாசிரியர்களின் ஆலோசனைகளை பெற அறிவுறுத்தல்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

யாழ்ப்பாண. மாவட்டத்தில் நெற்பயிரில் இலை மடிச்சு கட்டி நோய் தாக்கம் உணரப்படும் நிலையில் விவசாயிகள் உரிய காலப் பகுதியில் அருகில் உள்ள விவசாய போதனா ஆசிரியர்களின் ஆலோசனைகளை பெறுமாறு வட மாகாண பிரதி விவசாய பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறீரங்கன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது மழை பெய்த பின் காற்றோடு சேர்ந்து குளிருடனான காலநிலை அதிகமாக நிலவுவதால் நெற்பயிரில் இலை மடிச்சு கட்டி நோய் தாக்கம் ஆரம்பித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் தென்மராட்சி பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் குறித்த நோய் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய பகுதிகளிலும் நோய் தாக்கம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் நிலவுகிறது.

ஆகவே விவசாயிகள் குறித்த நோய் தாக்கத்தை ஆரம்பத்தில் கட்டுப்படுத்துவதற்கு அருகில் உள்ள விவசாய போதனாசிரியர்களை அணுகி அவர்களின் ஆலோசனையை பெற்று கிருமிநாசினிகளை விசுறுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# அயல் நாட்டு மீனவர்கள் எமது வளத்தை அழிக்கிறார்கள்: கேள்வி கேட்க முடியாமல் தவிக்கிறோம் என்கிறார் ஜான்சன் பிரிடாரோ!




எமது மீனவர்ளின் வாழ்வாதாரத்தை அயல் நாடு ஒன்றின் மீனவர்கள் அழித்து வரும் நிலையில் கேள்வி கேட்க திராணி அற்றவர்களாக கூனிக்குறுகி நிக்கிறோம் என மன்னார் சமூக அபிவிருத்திக்கான மையத்தின் இணைப்பாளர் ஜான்சன் பிரடாரோ தெரிவித்தார்.

20ம் திகதி அன்று வியாழக்கிழமை நயினாதீவில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் வடக்கு கிழக்கில் மீனவ சமூகம் சர்வதேச மீனவ தினத்தை கொண்டாடுகின்ற நிலையில் அவர்களின் துன்பியல் வாழ்வு தொடர்ந்து கொண்டே செல்கிறது.

குறிப்பாக வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை அயல்நாடு ஒன்றின் மீனவர்கள் தொடர்ச்சியாக அழித்து வரும் நிலையில் அதனை தட்டிக்கேட்க முடியாத இனமாக கூனிக்குறுகி நிக்கிறோம்.

எமது மீனவர்கள் இலங்கை கடல் சட்ட வரையறைக்குள் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் நிலையில் எமது கடல் எல்லைகளுக்குள் அயல் நாட்டு மீனவர்கள் அத்துமீறி வருகிறார்கள்.

அதன் காரணமாக எமது மீனவர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படு வரும் நிலையில் மீனவ சமூகம் தரையிலும் கடலிலும் பல கவனயீர்ப்புப் போராட்டங்களை மேற்கொண்டும் எல்லை தாண்டுவது நிறுத்தப்படவில்லை.

ஆகவே எமது மீனவ சமூகம் தனக்கே உரித்தான கடலில் அயல் நாட்டு மீனவர்களின் அத்துமீறல்கள் இல்லாமல் சுதந்திரமாக மீன்பிடிப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மாவீரர் நாள்

## (நிலைமண்டில ஆசிரியப்பா)

*மாவீரர் என்போர் மரணத்தை வென்றோர்.*
*காவிய நாயகர் கடமையைச் செய்தோர்.*
*சாவினை நெஞ்சிற் சரமாய்ச் சுமந்தோர்.*
*ஆவியை எமக்கு அளித்துச் சென்றோர்.*
*இளமைக் காலத்தை இனத்துக்காய்த் துறந்தோர்.*
*அழகான வாழ்வை அர்ப்பணம் செய்தோர்.*
*களமாடி எமக்காய்க் களத்தில் வீழ்ந்தோர்.*
*வளமான எதிர்காலம் விதையாய்த் தந்தோர்.*
*தலைவனின் ஆணையை தலைமேல் சுமந்தோர்.*
*விலையிலா உயிரை வீரமாய்த் துறந்தோர்.*
*அலைபோல் வந்த அன்னியர் எதிர்த்தோர்.*
*மலைபோல் நின்று மறித்து அழித்தோர்.*
*சாதிக்காய்த் துடிக்காமல் சாதிக்கத் துடித்தோர்.*
*சாதிப்ப தொன்றையே சபதமாய் ஏற்றோர்.*
*ஆதிக்க அரக்கரை அடியோடு அழித்தோர்.*
*பாதிப்பு மறந்து புலியாய்ப் பாய்ந்தோர்.*
*தாயகம் காக்க தானையாய்ச் சென்றோர்.*
*மாயன் செல்லில் மாண்டு வீழ்ந்தோர்.*
*தாயவள் பெருமையைத் தரணியிற் பொறித்தோர்.*
*தூய வாழ்வைத் தந்து சென்றோர்.*
*விண்ணை நோக்கி விரைந்த போதும்*
*மண்ணில் நாங்கள் மறப்போமா? உம்மை*
*கண்ணில் கண்ணீர் கசிந்து வந்தாலும்*
*அண்டம் முழுவதும் அகல்விளக்(கு) கேற்றுவோமே!*

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

# மாவீரர் வாரத்தையொட்டி மன்னாரில் மாவீரர் நினைவேந்தல் மற்றும் பெற்றோர்கள் மதிப்பளிப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்



மாவீரர் வாரத்தையொட்டி மன்னார் மாவட்டத்தில் உள்ள மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையோர் ஆகியோரை ஒன்றிணைத்து அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு 20-11-2025 அன்று வியாழன் காலை 10.30 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு குழுவின் ஏற்பாட்டில் மாவீரர்களின் உறவுகளுடன் சுமார் 150க்கும் மேற்பட்டோர் பங்கு பற்றலுடன் மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு நிகழ்வு உணர்வு பூர்வமாக நடைபெற்றுள்ளது.

இதன் போது மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாவீரர்களை நினைவு கூர்ந்து பொதுச் சுடர் ஏற்றப்பட்டு,மலர் தூவி அகவணக்கம் செலுத்தப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது.

இதன் போது கலந்து கொண்ட மாவீரர்களின் உறவுகள் கண்ணீர் மல்க தமது அஞ்சலி செலுத்தினர்.



இம்மதிப்பளிப்பில் அருட்தந்தையர்கள், முன்னாள் போராளிகள் மற்றும் மாவீரர் பெற்றோர்கள், பொதுமக்கள் என பலர் பங்குபற்றியிருந்தனர்.

குறித்த நிகழ்வில் மாவீரர் தியாகங்கள் பற்றிய பேச்சுக்கள் நடைபெற்றதுடன் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோருக்கு கௌரவிப்பு வழங்கப்பட்டதுடன் நினைவாக மரக்கன்றுகள் மாவீரர் பெற்றோர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# திருகோணமலையில் சட்டவிரோத புத்தர் சிலை அமைக்கப்பட்டதற்கு ஜனநாயக போராளிகள் கட்சி கண்டனம்!



திருகோணமலையில் சட்டவிரோத புத்தர் சிலை அமைக்கப்பட்டமைக்கு ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் சி.வேந்தன் தனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு மணல்காடு பிரதேசத்தில் ஊடகக்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் திருகோணமலையில் கடற்கரையில் சட்டத்திற்கு புறம்பாக மக்களின் ஏதிர்ப்பையும் மீறி புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அந்த புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சையை உருவாக்கியிருந்தது.

கடந்தகால அரசாங்கங்கள் வடக்கு கிழக்கில் பல விகாரைகளை அத்துமீறி கட்டியிருந்தன. இராணுவம், பொலிஸார், புத்த பிக்குகள் ஆகியோரின் துணையோடுதான் இந்த புத்த விகாரைகள் அமைக்கப்பட்டன. இந்த புத்த விகாரைகள், சிலைகள் உண்மையில் ஒரு ஆக்கிரமிப்பு சின்னமாகவே இருக்கின்றன.

சிங்கள மக்கள் இல்லாத இடத்தில் இவ்வாறு புத்த சிலைகள் அமைக்கப்படுவது உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறான செயற்பாடுகள் உண்மையில் ஒரு மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது. இதனை மதங்களுக்கிடையில் ஒரு பிளவை அல்லது பிரச்சினையை ஏற்படுத்துவதகவே பார்க்கின்றோம்.

அந்த இடத்தில் ஒரு புத்தர் சிலையை உருவாக்கிவிட்டு அங்கு சிங்கள குடியேற்றங்களை உருவாக்குவதற்க்கான ஒரு ஆக்கிரமிப்பாகவே பார்க்கமுடிகிறது.

உண்மையில் நீதிமன்ற அனுமதியில்லாமல், பொலிசாரின் அனுமதியில்லாமல் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்வதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இந்த அரசாங்கம் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களின் பெரும்பான்மை பலத்துடன் அதாவது மூன்றில் இரண்டு பலத்துடன் ஆட்சி அமைத்துள்ளது. இந்த அரசாங்கம் இனமத மொழி வேறுபாடின்றி ஆட்சி செய்வதாக தெரிவித்திருந்தார்கள். ஆனால் கடந்த கால அரசாங்கங்கள் எவ்வாறு இனவாத உச்சத்தில் ஆட்சி செய்ததோ அதேபோன்று இந்த புத்தர் சிலை வைப்பு இடம் பெற்றிருக்கின்றது.

உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டுமாக விருந்தால் இந்த அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளை கைவிடவேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் இனிமேலும் இடம் பெறகூடாது. இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் என்றார்.

# யாழ்ப்பாணம் நெல்லியடியில் மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் வரலாற்று சம்பவம்!

## உயிரியல்பாட விடைத்தாளை அனுப்ப மறந்த அதிகாரிகள்

யாழ்ப்பாணம் நெல்லியடியில் உள்ள பிரபல பாடசாலையொன்று உயர்தரப் பரீட்சை மையமாகச் செயற்பட்டுவரும் நிலையில், அங்கு உயிரியல் பாடத்தை எழுதிய மாணவர்களின் முதலாம் பகுதி விடைத்தாள்கள் திருத்தற் பணிகளுக்கு அனுப்பாமல் தவறவிடப்பட்டுள்ளன.

இலங்கையின் கல்வித்துறை வரலாற்றிலேயே இவ்வாறான மோசமான கவனக்குறைவு அல்லது தவறு இம்முறையே நேர்ந்திருப்துடன், தொடர்புடைய மாண வர்களின் கல்வி வாழ்க்கைக்கு மிகவும் மோசமான முறையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. நெல்லியடியில் உள்ள பிரபல பாடசாலையொன்று பரீட்சை மத்திய நிலையமாகச் செயற்பட்டு வருகின்றது. அங்கு சமீபத்தில் உயிரியல் பாடத்தின் முதலாம் பகுதியான பல்தேர்வு வினாப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது, 21 மாணவர்கள் பரீட்சையில் தோற்றி விடைகளை எழுதி முறைப்படி கையளித்துள்ளனர். இந்த விடைத்தாள்கள் அன்றையதினமே உயரிய பாதுகாப்புடன் திருத்தல் பணிகளுக்காக அனுப்பப்பட வேண்டும். ஆனால், பரீட்சை நிலையத்தில் கடமையாற்றியவர்களின் கவனக் குறைவால் அவை திருத்தல் பணிகளுக்காக அனுப்பப்படவில்லை.

மூன்று நாள்களின் பின்னர் சென்று பார்த்தபோதே, காகிதாதிகளுடன் அவை கட்டப்பட்டு இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. தற்போது அந்த விடைத் தாள்களை திருத்தல் பணிகளுக்காக அனுப்ப முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால், தொடர்புடைய 21 மாணவர்களும் பெருமளவில் புள்ளிகளை இழக்கும் கட்டாயம் தோன்றியுள்ளது.

உயர்தரப் பரீட்சையில் அதுவும் உயிரியல் போன்ற பாடங்களில் ஒன்று அல்லது இரண்டு புள்ளிகள்கூட மாணவர்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் வகையில் அமைகின்றன. இவ்வாறிருக்கையில், ஒரு பகுதி விடைத்தாள்கள் திருத்தல் பணிகளுக்கு அனுப்பப்படாதமை மாணவர்களின் இத்தனை ஆண்டுகால கல்வி வாழ்க்கையையும் அர்த்தமற்றதாக மாற்றியுள்ளதுடன், அவர்களை உச்சக்கட்ட மன அழுத்தத்துக்குள்ளும் தள்ளியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கல்வித் திணைக்களங்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், அந்தப் பரீட்சை மத்திய நிலையத்தில் கடமையாற்றியவர்கள் அங்கிருந்து நீக்கப்பட்டுள்ளனர். அத்துடன், அவர்களுக்கு எதிராகத் திணைக்கள ரீதியான விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



# நம்பி வாக்களித்த மக்களுக்கு துரோகம் இழைத்துள்ளீர்கள் என நாடாளுமன்றில் அநுர அரசாங்கத்தைச் சாடிய கஜேந்திரகுமார் எம்.பி!

“உங்களை நம்பி, நீங்கள் சொன்னதை எல்லாம் நம்பி உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு நீங்கள் முழுமையான துரோகத்தை இழைத்திருக்கிறீர்கள்” என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சு மீதான விவாதத்தின் போது, திருகோணமலை சட்ட விரோத விகாரை அமைப்பு குறித்து 18-11-2025 அன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், திருமலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றியபோது, சாதாரண சிங்கள மக்கள் அதை எதிர்க்கவில்லை. ஏனெனில், இனவாதத்தையும் மதவாதத்தையும் நீக்குவதாக நீங்கள் சொன்னதை நம்பி அவர்கள் உங்களுக்கே வாக்களித்திருந்தார்கள்.

இங்கிருக்கும் திருமலைக்கான தமிழ் பாராளுமன்ற உறுப்பினரையும் அவர்கள் தெரிவு செய்திருந்தார்கள்.

நீங்கள் அன்றிரவு எடுத்த நடவடிக்கையை எதிர்த்ததெல்லாம், சிங்கள காடையர்கள் மட்டுமே என்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அந்த இனவாத மதவாத காடைத்தனத்தை கண்டு நீங்கள் பின்வாங்கியிருந்திருக்க கூடாது.

உண்மையில் நீங்கள் என்ன செய்திருக்க வேண்டுமெனில், மக்களிடம் சென்று எது சரி எது பிழை என்பதை, எப்படியான் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை நேர்மையுடன் சொல்லியிருந்திருக்க வேண்டும்.

ஆனால் அதற்கு பதிலாக நீங்கள் இப்போது செய்ததெல்லாம், நீங்கள் (இனவாதிகள் இல்லை என) சொன்னதை நம்பி உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கும் உங்களுக்கு வாக்களித்த சிங்களரல்லாத வாக்களருக்கும் முழுமையான தூரோகத்தை இழைத்திருக்கிறீர்கள் என தெரிவித்தார்.



# அவசரமாக மட்டக்களப்பு தாந்தாமலையில் போடப்பட்ட தொல்பொருள் திணைக்கள அறிவித்தல் பலகை!




மட்டக்களப்பு - படுவான்கரை பகுதியில் இரண்டு இடங்களில் தொல்லியல் இடம் என மும்மொழிகளில் எழுதப்பட்ட புதிய பெயர்ப்பலகைகள் நாட்டப்பட்டுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியனேத்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மட்டக்களப்பு - படுவான்கரைப் பெருநிலம், மண்முனை தென்மேற்கு பிரதேச பிரிவில் உள்ள தாந்தாமலை முருகன் ஆலயத்தில் செல்லும் வீதிகளில் இரு இடங்களில் அன்று (20-11-2025) பி.ப:1.30 மணிக்கு தொல்பொருள் திணைக்களத்தால் அறிவித்தல் பலகை இடப்பட்டுள்ளன.

அதில் தாந்தாமலை தொல்லியல் இடம் என மூன்று மொழிகளாலும் எழுதப்பட்ட அறிவித்தல் பலகை தாந்தாமலை செல்லும் நாப்பது வட்டை சந்தியில் தாந்தாமலை முருகன் ஆலயத்தை அம்புக்குறி காட்டி போடப்பட்டதுடன் மற்றய அறிவித்தல் பலகை தாந்தாமலை முருகன் ஆலத்துக்கு அண்மையில் உள்ள பொலிஷ் சாவடி நிலைய சந்தியில் தாந்தாமலை முருகன் ஆலயத்தை அம்புக்குறியிட்டு காட்டப்பட்டுள்ளது.

திருகோணமலையில் அத்துமீறி கடந்த 2025, நவம்பர் 6 இல் புத்தர் சிலைவைக்கப்பட்டு சரியாக மூன்று தினங்களால் மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பெருநிலத்தில் இந்த விளம்பரப்பலகையிடப்பட்டு தாந்தாமலை தமிழரர்களின் பூர்வீக நிலத்தில் தொல்பொருள் ஆய்வு என்ற போர்வையில் பௌத்த விகாரைகளை நிறுவும் திட்டமாக இந்த விளம்பர அறிவிப்பு இடப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகம் எழுந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இவ்வார ராசிபலன்

**21-11-2025 வெள்ளி தொடக்கம் 27-11-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** வாழ்க்கையில் முன்னேற்றம் தரும் வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்ப்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகரிக்கும். உற்சாகம் களைகட்டும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். விரும்பியது நிறைவேறும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர்விடும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கை துணையால் வளம் பெருகும். பொருளாதாரம் மேம்படும். கடன் பாக்கிகள் வசூலாகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. மனிதநேயம் மிகுதியாகும். வணிகத்தொழில் வளம் கூடும். உடல்நிலையில் கவனம் தேவை. சாதக சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் உண்டு. பழையக்கடன் தீரும். விபரீத எண்ணம் விலகும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். துணிவோடு செயல்படுவீர்கள். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். பெற்றோர் ஆலோ சனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். இடமாற்றம் நன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 3,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,B




**ரிஷபம்:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். உள்ளம் மகிழும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். திடீர் செலவு ஏற்படும். மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை கூடும். மனைவியால் மதிப்பு உயரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். தன வரவுகள் தடைப்படும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். விவேகமான பேச்சால் வீண் வம்பு அகலும். உடன்பிறப்பால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். உறவினர் ஒற்றுமை பலப்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். சாமார்த்தியமாக செயல்படுவீர்கள். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: வினை தீர்க்கும் பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 2,9,8,5
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S




**மிதுனம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். புதுமைகள் நிறைந்த காலம். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பாராட்டுக்கள் கிடைக்கும். உத்தியோக வாய்ப்புண்டு. மன அமைதி கூடும். பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. சந்தோஷம் அதிகரிக்கும். குழந்தைகளால் பெருமை சேரும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். மங்கள செய்தி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர் உற்சாகம் கூடும். வியாபாரம் லாபம் தரும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். திட்டம் வெற்றி பெறும். கலைத்துறை ஆர்வம் கூடும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். குதூகலமான எண்ணம் உருவாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். பாராட்டுகள் உயரும். திட்டங்கள் எளிதாகும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. இசையார்வம் கூடும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். எதிரிகளின் தொல்லை குறையும். வாக்குவாதங்கள் உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: எட்டுக்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,7,6
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** எதிர்ப்புக்களால் பொறுப்பு கிடைக்கும் வாரம். விறுவிறுப்பான காலம். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைப்படும். நீண்டநாள் பிரச்சனை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் கவனம் தேவை. பொருளாதார சிக்கல் நீடிக்கும். பெண்களுக்கு கவனம் தேவை. தனவரவு உண்டு. மறைமுக எதிர்ப்பு விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. குடும்ப கௌரவம் உயரும். நாட்பட்ட நோய்களுக்கு தீர்வு கிடைக்கும். நினைத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். பூமி வாங்கும் யோகம் உண்டு. செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு உண்டாகும். மனைவி சச்சரவுகள் தீரும். தாய் வழி உறவில் கவனம் தேவை. உடல்நலத்தில் அக்கறை தேவை. எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். பயணம் அனுகூலம் தரும். பொருள் இழப்பு ஏற்படும். புதிய வேலை முயற்சி பலன் தரும். உல்லாசப் பயணம் இனிக்கும். பண நடமாட்டம் கூடும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடக்கும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. கொடுக்கல் வாங்கலில் சுமூக நிலை காணப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாகணபதி, அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**சிம்மம்:** பெருமைகள் சேரும் வாரம். விவசாயிகள் பயன்பெறும் வாரம். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடவும். தெம்பும், தைரியமும் கூடும். உடல் நலம் சிறக்கும். முகப்பொலிவு கூடும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல் நிலையில் கவனம் தேவை. உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். விவசாயிகள் பயன் பெறுவர். சகோதர வழியில் கவனம் தேவை. தர்மச்சிந்தனை மேலோங்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். காதலர்கள் தம்பதியாவார்கள். பங்குச்சந்தையில் லாபம் புரளும். செல்வாக்கு மேம்படும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். மருத்துவச் செலவுகள் கூடும். ஆடம்பரப் பொருள் சேரும். பெரியோர்களின் ஆதரவுப் பெருகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். மனம் மகிழும். பதவி உயர்வு தாமதமாகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். குடும்ப அன்யோன்யம் சீராக இருக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,G




**கன்னி:** வகையான வாழ்வமையும் வாரம். உடல்பொலிவு கூடும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பதவியில் உயர்ந்த நிலை உண்டு. நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி நிலவும். கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். இரகசியம் காப்பது நல்லது. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். ஆரோக்யம் சீராகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சியில் இருந்து பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பரால் இனிய செய்தி வந்தடையும். சுபவிரயம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். புதியச் சொத்துக்கள் சேரும். விலகி சென்றவர் திரும்பி வருவர். திருமண பேச்சு முடிவிற்கு வரும். வரவு திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு கூடும். கடன் விஷயத்தில் விடுதலைப் பெறுவீர்கள். செயல்களில் கவனமுடன் இருக்க வேண்டும். எதிரிகளால் பலன் கிடைக்கும். வாகன செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். பிள்ளைகள் வழியில் செலவுகள் அதிகரிக்கும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவுகள் ஏற்படும். நன்மைகள் அதிகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 3,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,I




**துலாம்:** பெண்களால் ஆதாயம் சேரும் வாரம். வறுமைகள் அகலும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். ஆரோக்கியம் அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. திருப்தி அதிகமாகும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். தந்தையின் உடல் நலம் கவனம் தேவை. எண்ணங்கள் பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பணியாட்கள் ஆதரவு பெருகும். பாதகமான சூழ்நிழைலகள் விலகும். குடும்ப மேன்மைகள் உருவாகும். உடல்சோர்வு நீங்கும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். வெற்றி வீடு தேடி வரும். முத்தான வாய்ப்பு பெருகும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,8,6
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,U




**விருச்சிகம்:** முத்தான வாய்ப்பு பெருகும் வாரம். சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மாறும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். விபரீத போக்கு மறையும். உறவினர் வருகையால் பலன் உண்டு. பெற்றோர்களின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பொறுப்புகள் கூடும். வாகன மாற்றம் உண்டாகும். மனஅமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். ஆன்மீக சிந்தனை கூடும். பிள்ளைகள் வழியில் இன்பம் உண்டாகும். பெற்றோர்களிடத்தில் சமாதானம் கிடைக்கும். வேண்டாத நபர் விலகுவர். பழையக்கடன் தீரும். பொறுமையைக் கையாள வேண்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்பால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். திருப்புமுனையான காலம். பொருளாதார சிக்கல் நீடிக்கும். வியாபாரத்தில் கவனம் தேவை. பிரச்சனை முடிவுக்கு வரும். வர்த்தக தொழில் லாபம் தரக்கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோணியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,1,3
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,T

(தொடர்ச்சி 22 பக்கம்)

உலக செய்திகள் World News

# "ஒரே ஜாதி, ஒரே மதம்" என்கின்ற போக்கு உலகெங்கும் உருவாக வேண்டும் என்கிறார் நடிகை ஐஸ்வர்யா ராய்



ஆந்திரப் பிரதேசத்தின் புட்டபர்த்தியில் நடைபெற்ற ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் பிறந்தநாள் விழாவில் ஐஸ்வர்யா ராய் பங்கேற்றார். நிகழ்வில் ஐஸ்வர்யா ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் பற்றிப் பேசினார். அவர் பேசுகையில், "ஒரே ஒரு சாதிதான் உள்ளது, அது மனிதகுலம் என்ற சாதி. ஒரே ஒரு மதம் மட்டுமே உள்ளது, அது அன்பு மதம். ஒரே ஒரு மொழி மட்டுமே உள்ளது, அது இதயத்தின் மொழி, ஒரே ஒரு கடவுள் மட்டுமே இருக்கிறார், அவர் எங்கும் நிறைந்தவர்" என்றார். அவரது உரை, சுருக்கமாக இருந்தாலும், கூட்டத்தில் இருந்த பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

ஐஸ்வர்யா ராய் கடைசியாக மணிரத்னத்தின் "பொன்னியின் செல்வன்" படங்களில் நடித்திருந்தார். அதன் பிறகு எந்தப் புதிய படங்களிலும் அவர் கையெழுத்திடவில்லை.

# லெபனானில் அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் — 13 பேர் உயிரிழப்பு

லெபனானின் தெற்கே சிடோன் என்ற கடலோர நகரில், பாலஸ்தீனிய அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் பாதுகாப்பு படை வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த சம்பவத்தில் 13 பேர் பலியாகி உள்ளனர். பலர் காயமடைந்தனர். அவர்களையும், உடல்களையும் மீட்க ஆம்புலன்சுகள் சென்றுள்ளன. இதுபற்றி இஸ்ரேல் கூறும்போது, இஸ்ரேல் மற்றும் ராணுவத்திற்கு எதிராக தாக்குதல் நடத்துவதற்காக, ஹமாஸ் அமைப்பு சார்பில் பயிற்சி அளிக்கப்பட்டு வந்த பகுதி மீது வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டது என தெரிவித்தது. இஸ்ரேல் மீது கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி ஹமாஸ் அமைப்பு கொடூர தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடியாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், காசா பகுதியில் 69 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்து உள்ளனர். 1 லட்சத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக, ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பும் போரில் ஈடுபட்டது. லெபனான் நாட்டில் இருந்தபடி, இஸ்ரேலை தாக்கியது. இதன் தொடர்ச்சியாக, இஸ்ரேல் பதிலடி தாக்குதலில் ஈடுபட்டது. இதில், அடுத்தடுத்து பலர் கொலை செய்யப்பட்டனர். ஹமாஸ் அமைப்பின் தலைவரான இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டார்.



2024-ம் ஆண்டு நவம்பரில் இஸ்ரேல் மற்றும் லெபனான் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. எனினும், பயங்கரவாத கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன என கூறி இஸ்ரேல் அவ்வப்போது லெபனான் மீது தாக்குதலை நடத்தி வருகிறது.

# ரஷிய அதிபருடன் இந்தியாவின் மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் சந்திப்பு



ரஷியாவின் மாஸ்கோ நகரில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் (எஸ்.சி.ஓ.) கலந்து கொள்வதற்காக மத்திய வெளிவிவகாரங்களுக்கான அமைச்சர் ஜெய்சங்கர் சென்றார். இந்த ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு 17 மற்றும் 18 ஆகிய நாட்களில் நடந்தது. இந்த பயணத்தின் ஒரு பகுதியாக அந்நாட்டு அதிபர் புதினை, மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் நேரில் சந்தித்து பேசினார். அப்போது, இரு தலைவர்களும் மண்டல மற்றும் உலகளாவிய வளர்ச்சிக்கான பார்வைகளை பகிர்ந்து கொண்டனர். இதுபற்றி மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் வெளியிட்டு உள்ள எக்ஸ் சமூக ஊடக பதிவில், மாஸ்கோவில் ரஷிய அதிபர் புதினை சந்தித்ததில் மகிழ்ச்சி. பிரதமர் மோடியின் வாழ்த்துகளை அவருக்கு தெரிவித்து கொண்டேன். இந்தியா - ரஷியா வருடாந்திர உச்சி மாநாட்டிற்கான ஏற்பாடுகள் பற்றியும் அவரிடம் எடுத்து கூறினேன். மண்டல மற்றும் உலகளாவிய முன்னேற்றங்கள் பற்றியும் ஆலோசனை மேற்கொண்டோம். இரு நாடுகளின் உறவுகளை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான அவருடைய பார்வைகளை மற்றும் வழிகாட்டுதல்களை ஆழ்ந்து மதிக்கிறேன் என தெரிவித்து உள்ளார்.

# தென்னாப்பிரிக்காவுக்கு சட்டவிரோதமாக 150 பாலஸ்தீனியர்கள் நாடு கடத்தல்

காசாவை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இஸ்ரேல் ராணுவத்துக்கும் இடையே போர் மூண்டது. இதில் காசாவை சேர்ந்த 65 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். அமெரிக்க அதிபர் டிரம்ப் தலையீட்டின்பேரில் இருதரப்புக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. மேலும் காசாவை சர்வதேச நகரமாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தநிலையில் காசாவில் இருந்து 153 பாலஸ்தீனியர்களை அங்கிருந்து வெளியேற்றி சட்டவிரோதமாக தங்கள் நாட்டில் விட்டதாக தென்னாப்பிரிக்கா வெளியுறவு அமைச்சர் ரோனால்ட் லமோலா தெரிவித்தார். தனி விமானம் மூலமாக அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு ஜோகன்னஸ்பெர்க்கில் இறக்கிவிடப்பட்டனர். அவர்கள் தங்களுடைய விருப்பத்தின் பெயரிலேயே காசாவில் இருந்து வெளியேறியதாக கூறினாலும் இது திட்டமிட்ட சதி என தென்னாப்பிரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.





# உக்ரைன் மீது ரஷியா ஏவுகணைகள், டிரோன்கள் மூலம் சரமாரி தாக்குதல் — 10 பேர் உயிரிழப்பு

உக்ரைனின் மேற்குப் பகுதியில் உள்ள டெர்னோபில் மீது ரஷியா டிரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். 12 குழந்தைகள் உள்பட 37 பேர் காயம் அடைந்துள்ளனர். டெர்னோபில்லி உள்ள இரண்டு 9 மாடி அடுக்குமாடி குடியிருப்பு மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

38 வகையான பல்வேறு ஏவுகணைகள் மற்றும் டிரோன்கள் மூலம் 476 தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது. சாதாரண வாழ்க்கைக்கு எதிரான ஒவ்வொரு வெட்கக்கேடான தாக்குதலும், போரை நிறுத்த ரஷியா மீதான அழுத்தம் போதுமானதாக இல்லை என்பதைக் குறிக்கிறது என ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். உக்ரைன் - ரஷியா இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில், ஜெலன்ஸ்கி பேச்சுவார்த்தை நடத்த துருக்கி சென்றுள்ளார். துருக்கி அதிபரை சந்தித்து ரஷியாவுக்கு ராஜாங்கரீதியாலான அழுத்தம் கொடுக்க வலியுறுத்துவேன் என ஜெலன்ஸ்தி தெரிவித்துள்ளார். முதலில் அமெரிக்காவின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காஃப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள துருக்கி வருவதாக தெரிவிக்கப்பட்டது. பின்னர், அவர் துருக்கி வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனுபமா நடித்துள்ள "லாக் டவுன்" படத்தின் வெளியீடு தேதி அறிவிப்பு

லைகா நிறுவனம் சார்பில் சுபாஸ்கரன் தயாரித்துள்ள "லாக் டவுன்" திரைப்படத்தில் நடிகை அனுபமா பரமேஸ்வரன் நடித்துள்ளார். இந்த படத்தை இயக்குனர் ஏஆர் ஜீவா இயக்கியுள்ளார். இந்த படத்தில் சார்லி, நிரோஷா, பிரியா வெங்கட், லிவிங்ஸ்டன், இந்துமதி, ராஜ்குமார், ஷாம்ஜி, லொள்ளு சபா மாறன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு என்ஆர் ரகுநந்தன் மற்றும் சித்தார்த் விபின் இசையமைத்துள்ளனர். கே.ஏ. சக்திவேல் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இப்படத்தின் டீசர், பாடல்கள் ஆகியவை சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இந்த நிலையில், லாக் டவுன் படம் எப்போது வெளியாகும் என ரசிகர்கள் காத்துக் கொண்டிருந்த நிலையில், தற்போது இந்த படத்தின் வெளியீடு தேதி அறிகாரபூர்வ அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, லாக் டவுன் படம் வருகிற டிசம்பர் மாதம் 5ந் தேதி வெளியாக உள்ளது.





# "மோனா" பட முன்னோட்டம் வெளியீடு

2016ம் ஆண்டு வெளியான "மோனா" அனிமேஷன் திரைப்படம் மாபெரும் வெற்றியை பெற்றது. இதனை தொடர்ந்து கடந்தாண்டு வெளியான "மோனா" 2ம் பாகமும் பெருவெற்றி பெற்றது.

அனிமேஷனில் வெளியாகி ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்ற "மோனா" திரைப்படம் லைவ்-ஆக்சன் படமாக தற்போது எடுக்கப்பட்டுள்ளது. இப்படத்தில் ராக் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இந்நிலையில், "மோனா லைவ் - ஆக்சன் திரைப்படத்தின் முன்னோட்டம் தற்போது வெளியானது. இப்படம் 2026 ஜூலை 10ம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** பிள்ளைகளால் பெருமை சேரும் வாரம். குடும்ப வளர்ச்சி கூடும். கௌரவமான காலம். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்யோகத்தில் உயர்வு ஏற்படும். ஆரோக்கியம் அதிகரிக்கும். சுறுசுறுப்பு அதிகமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கணவன், மனைவி உறவு நீடிக்கும். மருத்துவச் செலவில் திருப்தி அடைவீர். மகான்களின் சந்திப்பு கிட்டும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். பாதகம் விலகும். முத்தான வாய்ப்பு பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளிடத்தில் முன்னேற்றம் உண்டு. கடன் தொல்லை தீரும். கற்பனை வளம் அதிகரிக்கும். கட்டிடத்தொழில் லாபம் தரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். வேண்டாத விஷயங்கள் விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். போக்குவரத்தில் கவனம் தேவை. பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மன சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். வாயில்தேடி வாய்ப்பு வரும். காரிய தாமதம் ஏற்படும். எதிர்கால எண்ணம் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,4,1,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,V




**மகரம்:** விறுவிறுப்பாக செயல்படும் வாரம். போட்டிகள் குறையும். பெற்றோர்களின் ஆசி கிட்டும். நல்லோர்கள் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செலவு அதிகமாகும். பொறுப்புக்கள் கூடும். வேலை பளு அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். விவாக முயற்சி வெற்றி தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. வியாபாரத்தடை ஏற்படும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். சாதகமான காலம். கௌரவமான தருணம். கன்னிப் பெண்களுக்கு கவனம் தேவை. மேலதிகாரியிடம் பாராட்டு கிடைக்கும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். விரும்பிய பொருள் கிடைக்கும். பெருமைகள் உயரும். சிரமங்கள் குறையும். நிர்வாக அலைச்சல் கூடும். வியாபாரம் சுமாராக இருக்கும். போட்டிகள் கடுமையாகும். குடும்ப ஒற்றுமை குறையும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். மரத்தொழில் லாபம் தரும். நன்மையான விஷயங்களை தொடர்வீர்கள். முதுகில் வலி வந்து நீங்கும். மனபயம் நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரகதீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,K




**கும்பம்:** நன்மைகள் நாடி வரும் வாரம். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். உடல் அசதி உண்டாகும். உடன்பிறப்பால் உதவி உண்டு. படிப்பில் கவனம் தேவை. திடீர் பயணம் உண்டு. சம்பள உயர்வு உண்டு. சக ஊழியர்கள் உதவி உண்டு. பொறுப்புக்கள் கூடும். வியாபாரம் செழிக்கும். சாதுர்யமான காலம். விருப்பங்கள் நிறைவேறும். வேலை வாய்ப்புக் கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். பணவரவு பெருகும். அற்புத வாய்ப்பு கிட்டும். குடும்ப பிரச்சனைகள் தீரும். தேவைகள் நிறைவேறும். உடல் வலியிலிருந்து விடுதலை அடைவீர். எதிர்ப்புகள் விலகும். மெத்தனப்போக்கு விலகும். பயணம் வெற்றி தரும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். இனிதான செய்திகள் தேடி வரும். நினைத்த விஷயங்களில் வெற்றி நிகழும். பொன்னான நேரம் உங்களை வந்தடையும். பிள்ளைகளிடத்தில் உங்கள் அன்பு அதிகரிக்கும். மனதில் சந்தோஷம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். புதிய எண்ணங்கள் உருவாகும். தொழில் வளம் கூடும். மேலதிகார-யின் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு கவனம் தேவை. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,3,9,7
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,I




**மீனம்:** உயர்வு பெறும் வாரம். புதிய முதலீடு லாபம் தரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவிற்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலை அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். கலைத்தொழிலில் கவனம் தேவை. தாய்வழி உறவில் கவனம் தேவை. நட்டமில்லாத நன்மை தரும். சீரான வாழ்வமையும். சேமிப்பு அதிகமாகும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். செயல் விவேகம் கூடும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. மனமகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். குடும்ப உறவு பலப்படும். குடும்ப வளர்ச்சி பெருகும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோஷம் கூடும். மன அமைதி உண்டாகும். பொருளாதார வாய்ப்பு தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம தேவதை, அதிர்ஷ்ட எண்: 1,5,4,9
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,H

# கருப்புலிகள் - வரலாற்றின் எரிகதிர்

அந்த மண்...
இரத்தத்தால் செந்நிறமடைந்த வரலாற்றின் புனிதப் பக்கம்.
அந்த வான்...
போரின் புகைமூட்டில் கரும்பட்ட தமிழர் வானம்.
அந்த நேரம்...
05.07.1987ல் தீப்பொறியாக எழுந்த எழுச்சி
09.03.2009ல் அமரத்துவமாகி நின்ற நினைவு.

அந்தக் காலத்தின் இதயத்திலிருந்து
புராணங்களாக உருவெடுத்தார்கள் - கரும்புலிகள்.

படைப்பின் முதலெழுத்தாகவே
தங்களைத் தாமே ஆகுதியாக்கிக் கொண்டவர்கள்...
உயிரை வேட்கையில்லாமல்
ஆயுதமாக வடித்தவர்கள்...
அழிவின் வாய்க்குள் நுழைந்து
அழிவையே பின்வாங்க வைத்தவர்கள்...


அவர்கள் நடந்த பாதை
சாதாரணப் பாதை அல்ல -
நெருப்பு நதிகள் ஓடும்
இறப்பு மலர்கள் மலரும்
அருங்கடற்கரைப் பாதை.

ஆனால் அவர்கள் நடையிலோ
ஒரு நடுக்கமும் இல்லை...
ஏனெனில் அவர்கள் நெஞ்சில் இருந்தது
ஒரே ஒரு மொழி -
தமிழ்.
ஒரே ஒரு மானம் -
தமிழர் மானம்.

அவர்கள் போரிட்ட நிலம்
மண் அல்ல...
அது -
ஈழத்தின் அடுக்கடுக்கான வரலாற்றின்
ஆரணியக் கோவில்.

அங்கே அவர்கள்
உடலைத் தியாக தீயில் கரைத்தனர்,
ஆனால் எண்ணத்தை
எவராலும் அணைக்க முடியாத
விடுதலையின் மேகவெளியில்
நட்சத்திரமாக ஏற்றினர்.

கரும்புலிகள்...
அவர்கள் ஒரு படை அல்ல,
ஒரு தலைமுறையல்ல...
அவர்கள் -
நேரத்தை வென்று நிற்கும்
தத்துவம்.
அடக்கத்தை உடைக்கும்
அழியாத கோபம்.
அநியாயத்தைத் தகர்க்கும்
பழமையான தமிழர் ஆவேசம்.




இன்று அந்தப் பெயரே
இதயத்தில் துடிப்பாக,
வரலாற்றில் ஒளியாக,
இனத்தின் நினைவில் நிலையான
அமர நின்னலாக
எழுந்திருக்கிறது.

வீரர் ஒருவரின் மரணம்
செய்தி வரியில் முடிகிறது.
ஆனால்
கரும்புலி ஒருவரின் மறைவு -
வரலாற்றின் புதிய ஓர் அத்தியாயத்தைத் தொடங்குகிறது.

அவர்கள் விட்டுச் சென்ற
அடிச்சுவடு...
போரின் மண்வாசனையும்,
தமிழரின் உயிர்வாசனையும்
இணைத்த ஒரு நிரந்தரக் குரல்:

"எங்கள் வாழ்வை எடுத்துக் கொண்டாலும்,
எங்கள் விடுதலையின் கனவை
யாராலும் எடுக்க முடியாது."

இன்று...
அவர்களை நினைவுகூர்வது மட்டும் இல்லை,
அவர்களைப் புரிந்துகொள்வது -
தமிழரின் கடமை.

ஏனெனில்
கரும்புலிகள் -
மரணத்தை வென்றவர்கள் அல்ல,
மரணத்தையே ஆயுதமாக மாற்றியவர்கள்.
மண்ணின் சடலத்தில் இருந்து
தேசத்தின் ஆன்மாவை எழுப்பியவர்கள்.

அவர்கள்...
வரலாற்றின் கரும்பொரிய மின்னல்
அவர்கள்...
எதிர்கால தமிழரின் முதுகெலும்பு
அவர்கள்...
தமிழ் என்ற சொல்லை
மீண்டும் வாள் ஒலியால்
உலகம் உணர்த்திய வீரச் சிலைகள்.

அவர்களின் பயணம் முடிந்ததில்லை.
அவர்களின் ஒளி அணைந்ததில்லை.
அவர்களின் பெயர் மங்குவதில்லை.

ஏனெனில்
கரும்புலிகள்
காவியமாக எழுதப்படவில்லை -
வரலாறாக வாழ்கிறார்கள்.

எழுதியவர் - ஈழத்து நிலவன் (14-11-2025)

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND

INDUSTRIAL CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

# NESAN
## 416-908-5656



Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிதல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1546 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday November 21, 2025

# பத்தாம் நூற்றாண்டில் கம்போடியாவில் சோழ வேந்தர்கள் உருவாக்கிய சிவனாலயங்களை பத்திரமாகப் பாதுகாக்கும் விருஷ்டங்களின் வேர்கள்



கம்போடியா என்னும் பெருந்தேசத்திற்கு 10 ஆயிரம் நூற்றாண்டில் தமிழ்நாட்டிலிருந்து படைகளோடும் நூற்றுக்கணக்கான யானைகளோடும் சென்று ஆட்சியையும் நடத்தி அங்கு சிவனாலயங்களையும் நிர்மானித்தவர்கள் நமது ராஜேந்திர சோழன் மற்றும் ஜெயவர்மன் போன்ற மன்னர்கள் ....

அவ்வாறான மன்னர்களைக் கொண்டாடும் பெருவிழா நவம்பர் 22ம் 23ம் திகதிகளில் கம்போடியாவில் நடைபெறுகின்றது. பத்தாம் நூற்றாண்டில் இன்றிலிருந்து சுமார் 1000 வருடங்களுக்குப் முன்னர் கம்போடியாவில் தமிழ் வேந்தர்கள் உருவாக்கிய ஆயிரக்கணக்கான சிவனாலயங்களை தற்போதும் பத்திரமாகப் பாதுகாக்கும் விருஷ்டங்களின் வேர்களுக்கு அருகில் நோர்வே நாட்டு உல்லாசப் பயணிகளுடன் கனடா-திருமதி பத்மா லோகேந்திரரலிங்கம்.





# கனடா தமிழ் மிறர் பத்திரிகையின்பன் 20 வது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது

கனடா தமிழ் மிறர் பத்திரிகையின் 20 வது ஆண்டு விழா கடந்த சனிக்கிழமையன்று மார்க்கம்நகரில் உள்ள **CULTURAL CENTRE** மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கவிஞர் தாமரை அவர்கள ˙ கலந்து கொண்டார்கள். மேற்படி விழாவில் கனடிய தமிழ் ஊடகத் தளத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாகப் பணியாற்றும் கவிஞரும் எழுத்தாளருமான நாகமணி லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு சிறப்பு விருது வழங்கப்பெற்றது.

இங்கே காணப்பெறும் படங்களில் கவிஞர் தாமரை அவர்கன் வர்த்தக நண்பர்கள் சூழ நிற்க லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு விருதினை வழங்குவதையும், மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களான அமைச்சர் றேமண்ட் சோ அவர்கள் லோகன் கணபதி அவர்கள், விஜய் தணிகாசலம் அவர்கள் ஆகிய மூவரும் இணைந்து தமிழ் மிறர் பத்திரிகையின் ஆசிரியர் சார்ள்ஸ் தேவசகாயம் அவர்களைக் கௌரவிப்பதையும் காணலாம்.

# HERITAGE BEYOND BOARDERS அமைப்பானது நடத்திய பல் கலாச்சார விருது வழங்கும் வைபவத்தில் இரு தமிழ் ஊடகவியலாளர்களுக்கு கௌரவம்!



கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் பல்லின மக்களை ஒன்றிணைக்கும் அமைப்பான **HERITAGE BEYOND BOARDERTS** அமைப்பானது 15ம் திகதி சனிக்கிழமையன்று ரொறன்ரோ மாநகரில் நடத்திய பல்கலாச்சார விழா மற்றும் பல்லினங்களைச் சேர்ந்த வெற்றியாளர்களுக்கு பல் கலாச்சார விருது வழங்கும் வைபவம் அனைத்தும் சிறப்பாக நடைபெற்றன.

அமைப்பின் நிறுவனர் **NEEL NANDA** அவர்கள் கனடாவில் பலம் வாய்ந்த பல்லின ஊடகவியலாளர் அமைப்பான **ETHNIC PRESS AND MEDIA COUNCIL OF CANADA** இனது ஒரு சிரேஸ்ட உப தலைவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.
அவர் மேற்படி பல்கலாச்சார விழாவை தனது குழுவினருடன் இணைந்து சிற்பபாக ஏற்பாடு செய்திருந்தார். (தொடர்ச்சி 7ம் பக்கம்)

# கனடா – பைரவி நுண்கலைக் கூடம் இணைந்து நடத்திய "கார்த்திகைப் பூக்கள்" மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வைபவம்

கடந்த 16-11-2025 அன்று ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோவில் கனடா-பைரவி நுண்கலைக் கூடம் சஹானா இசைக் கல்லூரி மற்றும் சிகரம் கல்விச் சாலை ஆகிய இசை சார்ந்த நிறுவனங்களுடன் இணைந்து நடத்திய ˙கார்த்திகைப் பூக்கள்" என்னும் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் உணர்வுபூர்வமான வைபவம் மண்டபத்தில் கூடிய நூற்றுக்கணக்கான எமது உறவுகளுடன் அனுஸ்டிக்கப்பெற்றது.
மேற்படி கனடா-பைரவி நுண்கலைக் கூடம் சஹானா இசைக் கல்லூரி மற்றும் சிகரம் கல்விச் சாலை ஆகிய இசை சார்ந்த நிறுவனங்களில் இசை பயிலும் மாணவ மாணவிகள் உருக்கமான முறையில் மாவீரர்களுக்காக இசை அர்ப்பணம் செய்தனர்.
பெற்றோரும் உணர்வாளர்களும் அங்கு கூடியிருந்தனர்.
.இங்கு காணப்படும் படத்தில் இந்த நிகழ்வை நடத்த அனுசரணை வழங்கிய வர்த்தக அன்பர்களும் பைரவி நுண்கலைக் கூடத்தின் அதிபர் ரவிச்சந்திரன் அவர்களும் மற்றும் சஹானா இசைக் கல்லூரி சிகரம் கல்விச் சாலை ஆகிய நிறுவனங்களின் அதிபர்களும் காணப்பெறுகின்றனர்.

